# கொடுங்கோன்மையை

## எதிர்த்துக் குரல் கொடுப்போம்!

12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

" NAM NADU " Official Organ of the D. M. K.

மலர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 2009 23—4—1978 | இதழ் 32

## கலைஞர் கடிதம்

உடன்பிறப்பே,

இது உனக்கு அவசரமாக சில விஷயங்களைத் தெரிவிக்க வேண்டிய கடிதம். எனவே ஒரே நேரத்தில் 'நம்நாடு' இதழிலும் 'முரசொலி' இதழிலும் வெளியிடப்படுகிறது. சென்னையில் ஏப்ரல் 19 ஆம் நாள் காலையில் கூடிய செயற்குழுவின் தீர்மானங்கள் நாட்டுக்கும் நாடாள்வோரின் கவனத்திற்கும் வைக்கப் பட்டுள்ளன.

தொடர்ந்து பல நாட்களாகக் கிராமப்புறங்களிலும், சாலைகளிலும் இராணுவத்தினரை நடமாடவிட்டு, பொதுமக்களை பீதிக்கு ஆட்படுத்துகிற சர்வாதிகார பாணியையும் நியாயமான கோரிக்கைகளுக்காக இப்போதும், இனி எதிர்காலத்திலும் விவசாய சங்கங்கள், நெசவாளர் அமைப்புகள், தொழிலாளர் இயக்கங்கள் மட்டுமன்றி எந்த ஒரு அரசியல் கட்சியும் கிளர்ச்சியில் ஈடுபட முடியாதவாறு ஜனநாயகத்தின் குரல் வளையை அழுத்துகிற முறையையும் இன்றைய தமிழக அரசு தொடங்கி வைத்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

தலைமைக் கழகத்தின் சார்பில் சாதிக், அன்பில், புலவர், கண்ணப்பன், வி. கிருஷ்ணமூர்த்தி, கோ. சி. மணி, அக்கினி ராசு, ஆகியோர்கொண்ட ஆய்வுக்குழு, விவசாயக் கிளர்ச்சி நடைபெற்ற எல்லா இடங்களுக்கும் சென்று நேரிடையாகப் பல விவரங்களைத் திரட்டி வந்து தலைமைக் கழகத்திற்கு நீண்டதொரு அறிக்கையாகத் தந்திருக்கிருர்கள், அந்த அறிக்கை செயற்குழுவிலும், தலைமைக் கழகச் செயலாளர்கள் மத்தியிலும் விரிவாக விவாதிக்கப்பட்டு, ஒன்பது தீர்மானங்கள் வடித்தெடுக்கப் பட்டுள்ளன.

நேற்று முன்தினம்இந்திரா காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினரிடம் முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்கள் உறுதியளித்ததாக ஒரு செய்தி எல்லா ஏடுகளிலும் வெளிவந்துள்ளது.

''ஜப்தி போன்ற கடும் நடவடிக்கைகளை நடுத்தர, சிறு விவசாயிகளின் மீது எடுக்காமலிருக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று முதல்வர் அறிவித்ததாக வந்த தகவல்தான் அது!

இதிலிருந்தே' சிறு விவசாயிகள்— நடுத்தர விவசாயிகள் — ஜப்தி போன்ற, கைது போன்ற கடும் நடவடிக்கைகளைச் சகித்துக்கொள்ள முடியாமல் தான் குமுறிக் கொந்தளித்து இந்தப் போராட்டம் வெடித்துக் கிளம்பியிருக்கிறது என்ற உண்மை, தெளிவாக்கப் பட்டு விட்டது.

தாங்கமுடியாத தொல்லையின் காரணமாக விவசாயிகள் சீறிஎழுந்தனர். அமைதியான முறையில் தான் அவர்கள் கிளர்ச்சியைத் தொடங்கினுர்கள் என்ருலும் இது போன்ற கிளர்ச்சிகளில் வாடிக்கையாக நுழைந்து விடக்கூடிய சமூக விரோதிகள் சில இடங்களில் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டனர். சட்டம் ஒழுங்கு அமைதிகாப்பதில் போலீசாருக்கு இடமளிக்காமல் சமீப காலமாகச் சட்டத்தைத் தங்கள் கையில் தூக்கிக்கொண்டு அலைகின்ற ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்களும் அமளிகள் விளைவதற்குக்காரணகர்த்தாக்களாயினர். அமைதி வழி அறப்போர் மார்க்கமே சிறந்தது என்றும் — வன்முறை வழிகள் தவிர்க்கப்பட வேண்டுமென்றும் கருத்துக்கொண்ட தி. மு. கழகம் — வன்முறை எந்தக் காரணத்திற்காகத் தோன்றினுலும் அதனை வரவேற்காது! அதற்காக, நியாயமான போராட்டக்காரர்கள் மீது அவதூறு கூறி, அவர்களது போராட்டத்தை நசுக்குவதற்காக வன்முறை வண்ணத்தை வேண்டுமென்றே பூசுவதும் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல!

சில வாரங்களுக்கு முன்பு தி. மு. க. சார்பில் சென்னையில் விவசாயப்பேரணியொன்று நடத்தப்பட்டு சில முக்கியமான கோரிக்கைகள் முதல்வரிடம் தரப்பட்டன. அதன் பிறகு அரசாங்கம் அமைத்த விவசாயப் பிரதிநிதிகள் குழுவில் தி. மு. க. சார்புடைய விவசாயப் பிரதிநிதிகள் யாருக்கும் இடமளிக்கப் படவில்லை, ஆளுங்கட்சிச் சார்புடைய விவசாயப் பிரதிநிதிகள் (ஆளுங்கட்சியின் கணிப்புப்படி சிறிய நடுத்தர விவசாயிகள் அல்லாதார்) அந்தக் குழுவில் நியமிக்கப்பட்டனர். திரு. நாராயணசாமி நாயுடு அவர்களும் அவரது சங்கத்தைச் சேர்ந்தோரும் அந்தக் குழுவில் இடம் பெற்றனர்.

குழுவின் ஆய்வுக் கூட்டங்கள் நடந்து கொண்டிருக்கும்போதே, கடன் கட்ட முடியாத சிறு விவசாயிகள் ஜப்திக்கு ஆளாக்கப்பட்டும்- கைது செய்யப்பட்டும் — அரசு தந்த உத்திரவாதத்துக்கு மாருகக் கொடுமைப்படுத்தப் பட்டனர். அதனை நாயுடு அவர்களும் மற்றவர்களும் எடுத்துச் சொல்லியும் அரசாங்கம், காதில் போட்டுக் கொள்ளவில்லை. எனவே அவர்களில் சிலர் அந்தக் குழுவிலிருந்து விலகித் தமது எதிர்ப்பைத் தெரி

(2-ம் பக்கம் பார்க்க)

# அடக்குமுறைக் கண்டனவாரம்-
# நாடு முழுதும் நடக்கட்டும்!

# கலைஞர் கடிதம்...

(முதற் பக்கத் தொடர்ச்சி)

வித்தனர். அதன் பிறகும் அரசு, மெத்தனப் போக்கையே கடைப்பிடித்தது. அதன்விளைவு போராட்டமாக மாறிவிட்டது.

போலீசார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தையும் – இராணுவ நடவடிக்கைகளையும் தி. மு. கழகம் மட்டுமல்ல; இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக் காரசாரமாகக் கண்டித்து அறிக்கை வெளியிட்டு, ஆய்வுக் குழுவையும் அனுப்பி விவசாயிகளுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளையும். பட்டியல் போட்டுக் காட்டியுள்ளது. காங்கிரஸ் கட்சித் தலைவர்களும், மார்க்சிஸ்ட் கட்சியும், ஜனதா கட்சி எம். பி. க்களும் இந்திரா காங்கிரஸ் கட்சியும் அரசு கையாண்டுள்ள முறைகள் குறைபாடுடையவை என்று சுட்டிக் காட்டியுள்ளன. ஆளுங்கட்சியுடன் அதன் தோழமைக் கட்சிகளுக்குள்ள தொடர்புக்கு ஏற்ப அந்த அறிக்கைகளின் தலைமையில் வேறுபாடானவாசகங்கள் காணப்பட்டாலும் அரசியல் கட்சிகளுக்கு அம்பாற்பட்ட நிலையில் விவசாயிகளின் பொதுவான சங்கடங்களுக்குத் தீர்வு காண வேண்டுமென்ற கருத்து அநேகமாக எல்லாக் கட்சித் தலைவர்களாலும் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது.

தி. மு. கழகத்தைப் பொறுத்தவரையில் தமிழ் நாட்டின்தலையாயஎதிர்க் கட்சி என்ற நிலையில் தனது கடமையை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு அதற்கு உண்டு. கழக முத்திரையுடன் தான் விவசாயிகள் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்றில்லாமல் அனைத்துக் கட்சிகளின் சார்பிலே தீர்வு காண்பதற்குக் கழகம் இப்போதும் தயாராகவே இருக்கிறது. அந்த நிலை உருவாகிற வரையில் கழகம் இந்தப் பிரச்சினைகளில் ஒதுங்கியிருக்க முடியாது.

ஆளுங்கட்சியாக இருந்த அனுபவத்தில் விவசாயிகளின் உணர்ச்சிகளை நன்கு புரிந்துகொண்டிருக்கிற வாய்ப்பு தி. மு. கழகத்திற்கு உண்டு! கழக ஆட்சியின்போது விவசாயிகளின் போர் மூண்டெழுந்து விரும்பத்தகாத நிகழ்ச்சிகள்— விபரீத விளைவுகள்— ஏற்பட்டபோது; உடனடியாகக் கழக அரசு, அந்தப் போராட்டத்திற்குத் தலைமையேற்றவர்கள், முன்நின்று நடத்தியவர்கள் கம்யூனிஸ்டு தலைவர் திரு.கலியாணசுந்தரம் அவர்கள் உட்பட அனைவரையும் அழைத்துப் பேசி சுமூக உடன்பாடு கண்டதை யாரும் மறந்திருக்க முடியாது. ஆனால் இப்போது —

போராட்டம் நடத்தியவர்களையும் அந்தச் சங்கத்துத் தலைவர்களையும் சிறையில் பூட்டி விட்டு விவசாயப் பிரதிநிதிகள் என்ற பெயரால் வேறு சிலரை மட்டும் வைத்துக் கொண்டு பேசுகிறோம் என்பது பொருத்தமற்ற கூற்றாகும்!

இவற்றையெல்லாம்எடுத்து விளக்கவும், செயற்குழுத் தீர்மானங்களை மக்கள் மன்றத்தில் வைக்கவும் தான் ஏப்ரல் 23ஆம்நாள் முதல் ஒரு வார காலம் "அடக்குமுறைக் கண்டன வாரம்" நடத்திட முடிவெடுக்கப் பட்டுள்ளது. இந்தக் கூட்டங்களில் இந்தப் பிரச்சினையைப் பொறுத்து ஒத்த கருத்துடைய மற்ற அரசியல் கட்சிக் காரர்கள் கலந்துகொள்ள ஒப்பினால் அவர்களையும் இணைத்து நடத்தலாம்.

★ இராணுவத்தைத் திரும்பிப் போகச் செய்திடுக;

★ அரசின் அணுகுமுறை, விவசாயக் கிளர்ச்சி ஏற்படக் காரணங்கள், ஆளுங் கட்சியினர் விளைத்த அமளி, இவை போன்றவைகளை ஆராய; நீதிபதியும் பொது மக்கள் பிரதிநிதிகளும் கொண்ட விசாரணைக் குழு அமைத்திடுக!

★ விவசாயிகள் அனைவரையும் நிபந்தனையின்றி விடுதலை செய்திடுக!

★ இந்தக் கிளர்ச்சியில் ஈடுபடாத பல்வேறு அரசியல் கட்சிக்காரர்கள் மீது போடப்பட்டுள்ள வழக்குகளைத் திரும்பப் பெறுக!

★ சிறு விவசாயிகள் நடுத்தர விவசாயிகள் ஏற்றுள்ள தொல்லைகளுக்கு நிவாரணம் கண்டிடுக!

இத்தகைய முழக்கங்களின் அடிப்படையில் நமது கூட்டங்கள் தமிழக முழுவதும் நடைபெற்றாக வேண்டும். ஆங்காங்குள்ள மாவட்ட, ஒன்றிய கிளை அமைப்புக்கள் கழகப் பேச்சாளர்களுடனும் — தலைமைக் கழகக் கொள்கை பரப்புச் செயலாளர் நண்பர் கந்தப்பன் அவர்களுடனும் உடனடியாகத் தொடர்பு கொண்டு "அடக்குமுறைக் கண்டன வாரத்தை" அமைதி குலையாமல் எழுச்சியுடன் நடத்திடுக! கழகம், பாட்டாளிகளுக்காகப் பாடுபடும் பாசறை என்பதை நமது கூட்டங்கள் விளக்கட்டும்! ஜனநாயகத்தை நசுக்கும் கொடுங்கோன்மையை நாடு உணரட்டும்!

அன்புள்ள
மு.க.

# எட்டுத் திக்கிலும்!

## ஒரு இளவரசியின் காதல் விவகாரங்கள்!

மார்க்கெரட் — இங்கிலாந்து அரசியான எலிசபெத்தின் தங்கையாவார். இந்த இளவரசியின் வயது நாற்பத்தேழு. அவர் தமது இருபத்து நான்காவது வயதில் டவுன்சென்ட் என்ற இராணுவ அதிகாரியைக் காதலித்தார். அரச குடும்ப அந்தஸ்து மிரட்டியதால் அந்தக் காதலைக் காற்றிலே பறக்கவிட்டு ஸ்நோவ்டன் என்பவரை மணந்தார்.

இரண்டு குழந்தைகளுக்குத் தாயான பிறகு கணவர் ஸ்நோவ்டனை விட்டு விலகித் தம்மை விடப் பதினேழு வயது இளையவரான லெவலின் என்ற புதியவருடன் சுற்றிக் கொண்டிருக்கிறார்.

பொது வாழ்வுக்குக் களங்கம் தேடும் வகையில் நடந்து கொள்ளும் இளவரசிக்கு அரச குடும்பத்தவர் என்ற முறையில் ஆண்டொன்றுக்கு தரும் ஐம்பத்து நான்கு லட்ச ரூபாயைத் தொடர்ந்து தர வேண்டுமா என இங்கிலாந்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வினாக்கள் தொடுத்து வருகிறார்கள் இப்போது, தங்கையின் காதல் விவகாரங்களால் தலைகுனிவுக்கு ஆளாகி வரும் அரசி எலிசபெத் பொது வாழ்க்கையிலிருந்து விலகிக் கொள்ளும்படி மார்க்கெரட்டைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

அக்கா மீது அன்பும் மரியாதையும் கொண்டிருக்கும் தங்கை அவ் வேண்டுகோளை ஏற்று இளவரசிப் பட்டத்தைத் துறந்து பொது வாழ்க்கையிலிருந்து விலகினாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை!

இதற்கிடையே —

மார்க்ரெட்டின் மனம் கவர்ந்த இளம் வயதுக் காதலனை லெவலின் தன் காதல் அனுபவங்களை விவரித்து ஒரு புத்தகம் எழுதி எக்கச்சக்கமான பணம் சேர்த்துவிட்டார்.

மார்க்ரெட் ஓர் இளவரசியாக இருக்கத் தகுதியில்லை. ஒரு நடிகையாக இருக்கத்தான் தகுதி என்று பலர் கூறுவதில் தவறேது'

## கொரில்லாக்களின் கொட்டம் .. அடங்குமா?

இத்தாலியின் முன்னாள் தலைமை அமைச்சரான ஆல்டோ மொரோவை சில கொரில்லாக்கள் கடத்திச் சென்றனர் என்பது தெரிந்ததே.

அவரை மீட்பதில் தீவிரமாக இருக்கும் காவலர் ஒரு ஆயுதக் கிடங்கைச் சோதனையிட்டபோது வெடி மருந்துகள், கைத் துப்பாக்கியின் பல்வேறு உறுப்புகள் பல ஆயுதங்கள் போன்றவற்றைக் கைப்பற்றினார்கள். நான்கு கொரில்லாக்களையும் கைது செய்தார்கள். அவர்களில் ஒருவர் பெண்,

## ஜாகீர்

ஆல்டோ மொரோவைக் கடத்தியவர்கள் சிறையிலிருக்கும் பன்னிரண்டு கொரில்லாக்களை விடுவிக்கவேண்டுமென அரசைக் கோரி வருகிறார்கள்.

கடத்தப்பட்ட ஆல்டோ மொரோ எங்கு அடைத்து வைக்கப்பட்டுள்ளார் என்று இன்னும் கண்டுபிடிக்க இயலவில்லை.

(இறுதியாக வந்த தகவலின்படி அவர் கொரில்லாக்களால் சுட்டுக் கொல்லப்பட்டுவிட்டார் எனத் தெரிகிறது.)

## பாகிஸ்தான் அதிபருக்கு சீன கோரிக்கை

பூட்டோவுக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை இரத்து செய்ய வேண்டுமென பெரும்பான்மையான நாடுகள் — குறிப்பாக அரபுநாடுகள் — வற்புறுத்தி வருகின்றன.

வல்லரசுகளில் ஒன்றான சீனாவும் இப்போது பூட்டோவுக்கு தூக்குதண்டனை அளிக்க வேண்டாம் என கோரிக்கை விடுத்துள்ளது.

சீனத் தூதுவரான ஹா—பெய்—சான் பாகிஸ்தான் அதிபர் ஜியாவுர் ரஹ்மானைச் சந்தித்து, சீன அரசு சார்பாக இக் கோரிக்கையைத் தெரிவித்தார்.

## மரணத்தோடு ஓர் விளையாட்டு!

கரேன் ஆன் குயின்லான் என்ற முப்பதுவயதான பெண் நியூஜெர்சியைச் சேர்ந்த (போரிஸ் நகர்) வள்.

கடந்த மூன்று ஆண்டுகாலமாக அவள் மயக்க நிலையில் படுத்த படுக்கையாகவே இருந்து வருகிறாள்.

அவள் இப்படி உயிரோடு பிணமாக இருப்பதைக் காட்டிலும் மாண்டுவிடுவதே நல்லதெனத் தீர்மானித்த அவளுடைய பெற்றோர் தம் மகளைக் 'கருணைக் கொலை' செய்ய அனுமதிக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டனர். அரசாங்கம் அவர்களின் கோரிக்கையை நீதிமன்றத்தின் முன் வைத்தது. நீதிமன்றம் கருணைக் கொலையை அனுமதித்தது.

கருணைக் கொலையை எதிர்த்தும், ஆதரித்தும் பல குரல்கள் கிளம்பின,

என்றபோதும் — அந்தப் பெண்ணைச் சாகடிப்பதற்காக முதற்கட்டமாக — பெண்ணுக்குப் பொருத்தப்பட்ட சுவாச இணைப்பு துண்டிக்கப்பட்டது. ஆனாலும் அவள் இன்னும் மயக்க நிலையிலேயே இருக்கிறாள்.

## பகலில் அரசு வேலை; இரவில் சினிமா ஷூட்டிங்:

# 'சட்டபூர்வமான' எம். ஜி. ஆரின் ஈடுபாடு— சந்திசிரிக்கும் முன்னுதாரணம்!

இப்பொழுது நமக்கு வாய்த்திருக்கும் முதலமைச்சர் 'முதல்வர் வேலையைப் பார்த்துக்கொண்டே சினிமாவில் நடிக்கப் போகிறேன்' என்றார். நடிக்கவும் தொடங்கிவிட்டார்.

அரசாங்கம் சட்டபூர்வமாக அனுமதித்துள்ள ஒரு தொழிலில் ஈடுபடுவது எப்படித் தவறாகும்? அதிலென்ன குற்றம்?' என்று கேட்டுத் தமது செயலுக்கு நியாயம் கற்பிக்கிறார்.

ஆமாம்; அரசு அனுமதித்துள்ள சட்டப்பூர்வமான தொழிலாக 'சினிமாத் தொழில்' இருப்பதால் முதலமைச்சர் எம். ஜி, ஆர். நடிக்கிறாராம்.

அரசாங்கம் அனுமதித்துள்ள சட்டப் பூர்வமான தொழிலான சினிமாவில் ஒரு முதலமைச்சர் நடிப்பது நியாயம்தான்— என்பது எம். ஜி. ஆரின் வாதம்.

இவருடைய வாதத்தைக் கேட்கும் பொழுது எனக்கு ஏற்படும் ஐயம் இது தான்;—

பத்திரிகைகளில் செய்தியைப் படிக்கின்றோம் — 'இதுவரை எதிர்க்கட்சித் தலைவராயிருந்த சவாண் அந்தப் பதவியை இழந்தார். இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஸ்டீபன் நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவரானார்' என்று

ஆனால், மாராட்டிய மாநிலத்தில் காங்கிரஸ் கட்சியும் இந்திரா காங்கிரஸ் கட்சியும் கூட்டாக மந்திரி சபை அமைத்துள்ளன. நாளையோ, நாளை மறுநாளோ இப்பொழுது இருக்கும் அமைச்சரவைக்கு நெருக்கடி ஏற்படவோ, அமைச்சரவை கவிழவோ அங்கே நிறைய வாய்ப்புகள் உள்ளன. அப்படி அமைச்சரவை கவிழ்ந்து ஒரு தேர்தல் நடக்கிறது என்று வைத்துக் கொள்ளுவோம்.

அங்கே பல கட்சிகள் போட்டியிடலாம். கடந்த தேர்தலில் பல கட்சிகள் போட்டியிட்டிருக்கின்றன. இப்பொழுது போட்டியிடும் கட்சியில் ஒரு புதிய கட்சியும் இடம் பெறுகிறது.

மராட்டிய மாநிலத்தின் தலைநகரான பம்பாய் நகரத்தில் 'சிவப்பு விளக்குப் பகுதி' இருப்பது உங்களுக்குத் தெரியும்.

அந்தச் சிவப்பு விளக்குப் பகுதியில் அந்தத்தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள் 'செல்வச் செழிப்புக்காக' அந்தத் தொழிலிலே ஈடுபட்டவர்கள் அல்லர். எப்படியாவது உயிர் வாழவேண்டும்; அரைவயிறு உணவு உண்ணவேண்டும் என்பதற்காக அந்தத் தொழிலில் ஈடுபட்டவர்கள். அப்படி அவர்கள் வாழ சிவப்பு விளக்குப் பகுதியில் 'அந்தத் தொழில்' அரசாங்கத்தால் சட்டப்பூர்வமாக அனுமதிக்கப்பட்டதாகும்.

அங்கே, காசுக்காக உடலைவிற்று வாழும் பெண்களுக்குத் தங்களுடைய குறைகளைச் சட்டமன்றத்தில் எடுத்துரைக்க, தங்கள் உரிமைகளைக் கேட்க இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம்.

அந்தச் சிவப்பு விளக்குப் பகுதிகளில் பெண்கள், அவர்களுக்குச் செல்வாக்கு உள்ள ஐந்து தொகுதிகளில் போட்டியிடுகிறார்கள். சிவப்பு விளக்குப் பகுதிப் பெண்களாயிற்றே, வெற்றி பெறாமல் இருப்பார்களா? ஐந்து பேரும் வெற்றி பெறுகிறார்கள்.

போட்டியிட்ட மற்றக் கட்சிகள் எதற்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. சிவப்பு விளக்குப் பகுதிப் பெண்கள் ஐவரும் கூட்டுச் சேர்ந்தால்தான் மந்திரி சபை அமைக்க முடியும் என்ற நிலைமை. எனவே, இவர்களைக் கூட்டுச் சேர்த்துக் கொள்ள விரும்புகிறார்கள்.

சிவப்பு விளக்குப் பகுதிப் பெண்கள் கூடிப் பேசுகிறார்கள். அமைச்சர் பதவி

**வை. கோபால்சாமி,**
எம்.ஏ., பி.எல்., எம்.பி.

தருவதாக இருந்தால்தான் கூட்டுச் சேர முடியும் என்கிறார்கள்.

இவர்களுடைய கூட்டால் பெரும்பான்மை கிடைத்து அமைச்சரவை அமைக்க நினைக்கும் கட்சியினர் அமைச்சர் பதவி தர உடனே ஒப்புக் கொள்கின்றனர்.

சிவப்பு விளக்குப் பகுதிப் பெண்களில் ஒருவர் மந்திரி ஆகிவிட்டார். சமூக நலத்துறை மந்திரியாகி விட்டார்.

அந்தப் பெண்ணுக்கு மாதச் சம்பளம் ஆயிரம் ரூபாய் போதவில்லை. வேறு வருமானம் தேவைப்படுகிறது. பழைய வாழ்க்கையின் போது வாங்கிய கடன்களை அடைக்க வேண்டும், அதற்கு என்ன செய்ய முடியும்? அவருக்கு வேறு வழியில்லை; யோசித்தார்.

**அமைச்சர் பதவி என்பது ஐந்தாண்டுக் காலத்துக்குமட்டும் உரியது. இந்தப் பதவியிலிருப்பதால் தமது வாடிக்கைக்காரர்களை இழந்துவிட்டால் பிறகு எப்படி வாழ முடியும்?**

என்ன செய்வது என்று வழி தெரியாது திகைத்த சிவப்பு விளக்குப் பகுதிப் பெண்ணான அந்தச் சமூகநல அமைச்சருக்கு நம் முதலமைச்சரின் செய்கை முன் உதாரணமாக அமைந்துவிடுகிறது.

முதலமைச்சரிடம் போய்ச் சொல்லி விடுகிறார்; டில்லியில் உள்ளவர்களுக்கும் தெரிவித்து விடுகிறார்.

**"தமிழ்நாட்டின் முதலமைச்சரான எம். ஜி. ஆர். பகல் நேரத்தில் அரசாங்க அலுவல்களைக் கவனித்துவிட்டு இரவில் சினிமா ஷூட்டிங்கில் கலந்துகொள்கிறார். அரசாங்கம் அனுமதித்துள்ள சட்டப்பூர்வமான தொழிலில் ஈடுபடுவது தவறில்லை என்பதைக் கூறி முன் உதாரணமாக இருந்து சினிமாவில் நடிக்கிறார்."**

**"ஒரு முதலமைச்சர் சட்டப்பூர்வமாக அனுமதிக்கப்பட்ட தொழிலில் ஈடுபட்டிருக்கும் பொழுது அமைச்சரான நான், பகலில் அரசாங்க வேலையில் ஈடுபட்டுவிட்டு இரவில் 'எனக்குப் பழக்கப்பட்ட தொழிலில்' ஈடுபடுகிறேன். சிவப்பு விளக்குப் பகுதித் தொழில் அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட சட்டப்பூர்வமான தொழிலாகும்; இதில் ஈடுபடுவது எப்படித் தவறாகும்?" என்று எடுத்துரைக்கிறார்.**

**பகலில் அரசாங்க வேலை! இரவில் சிவப்பு விளக்குப் பகுதி வேலை?**

சமூகநலத் துறை அமைச்சரான அந்தப் பெண் மந்திரியின் இந்தச் செயலுக்கு என்ன பட்டம் சூட்டுவோம்!

**இதைவிடக் கேவலம் — அசிங்கம் வேறு எதுவும் இருக்க முடியுமா?**

இப்படி நடந்தால் யாரும் ஆச்சரியப்பட வேண்டாம்!

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர்கள் எது எதற்கோ முன்னுதாரணமாக — வழிகாட்டியாக விளங்கினார்கள். ஆனால், இப்போதைய முதலமைச்சர் எம். ஜி. ஆர், எதற்கு உதாரணமாக விளங்குகிறார்?

சிவப்பு விளக்குப் பகுதிப் பெண்களுக்கு அல்லவா!

சீரழிந்து போன சிவப்பு விளக்குப் பகுதிச் சிங்காரி பகலில் அரசாங்க வேலை; இரவில் வாடிக்கைக்காரர்களைத் திருப்திப்படுத்தும் வழக்கமான வேலை என்பதற்கும், எம்.ஜி.ஆர். 'பகலில் அரசாங்க வேலை இரவில் சினிமாஷூட்டிங்' என்பதற்கும் எந்தவித வித்தியாசமுமில்லை.

இருவருமே 'சட்டப்பூர்வமான தொழிலைச் செய்கிறார்கள்.

எதிலுமே 'தனிப் பிறவியான எம். ஜி. ஆர். சிவப்பு விளக்குப் பகுதிப் பெண்கள், 'சட்டப்பூர்வமான தொழில் நடத்த முன்னுதாரணமாக விளங்கும் கேவலத்தை எண்ணி எண்ணி 'பெருமை'ப்படுவதைத் தவிர வேறு வழியில்லை!

# இணைப்பு மொழி - சில உண்மைகள்!

அண்மையில் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய் அகில இந்திய ஆட்சி மொழி மாநாட்டைத் துவக்கி வைத்த போதும், தமிழ்நாடு சனதா கட்சி மாநில மாநாட்டை முடித்து வைத்தபோதும் ஆட்சி மொழி குறித்துத் தெரிவித்த சில கருத்துகள் சிந்தனையைத் தூண்டுபவைகளாக அமைந்துள்ளன.

“இந்தியாவைப் பலப்படுத்தவும், ஒற்றுமைப்படுத்தவும் மக்களால் புரிந்துகொள்ளக் கூடிய ஒரு பொது இணைப்பு மொழி தேவை. அதற்கு உகந்தது இந்திதான். ஏனெனில் அது 60 சத வீதம் மக்களால் புரிந்துகொள்ளக்கூடியமொழி ஆங்கிலம் அந்த இடத்தைப் பெற முடியாது. ஏனென்றால் அது இரண்டு சதவீத மக்களால் மட்டுமே பேசப்படுகின்றது. அது அந்நிய மொழியும் கூட. அரசியல் அமைப்பால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்திய மொழிகளில் ஆங்கிலம் இல்லை. எந்த மொழியாவது இந்தியைவிட அதிகப்படியான மக்களால் புரிந்து கொள்ளப்படுவதாக இருந்தால், அம்மொழியைப் பொது மொழியாக ஏற்றுக் கொள்வதில் எனக்கு மறுப்பு இல்லை. இந்தியை யார் மீதும் திணிக்கும் நோக்கம் கிடையாது. அது தவறான பிரச்சாரம். அதில் உண்மை இல்லை’’ இவ்வாறு தேசாய் பேசியிருக்கிறார்.

தெரியாமல்தான் கேட்கிறோம். உண்மையிலேயே இந்தி இந்தியாவில் 60 சதவீத மக்களால் பேசப்படுகின்றதா? கடைசியாக (1971 ஆம் ஆண்டு) எடுக்கப்பட்ட இந்திய மக்கட் தொகைக் கணக்கின்படி மொத்த மக்கட் தொகை 548,159,652. இதில் இந்தி பேசுவோரின் மொத்த எண்ணிக்கை 208, 514, 025, அதாவது மொத்த மக்கட் தொகையில் சுமார் 38 சதவீத மக்கள்தான் இந்தியைப் புரிந்து கொண்டவர்கள். 1965 ஆம் ஆண்டிலே 30 சதவிகிதமாக இருந்தது, இன்று 38 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. மக்கட் தொகையும் 1945-ல் 44 கோடியாகஇருந்து இன்று 54 கோடியாக உயர்ந்துள்ளதையும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அப்படியே 60 சதவீதம் என்று எடுத்துக்கொண்டாலும் அதன் அடிப்படையில் அவர்கள் காட்டும் காரணம் சரியானதா? ஒரு மொழி அதிகமான மக்களால் பேசப்படுகிறது என்பதற்கும், அதிகமான பகுதிகளில் பரவியிருக்கிறது என்பதற்கும் இடையே நுண்ணிய வேறுபாடுகள் உண்டு. அதிகமான மக்களால் பேசப்படுவதைவிட, அதிகமான பகுதிகளில் பரவியுள்ள மொழியையே அனைவரும் விரும்பி ஏற்பர். உதாரணமாக இன்று உலகத்தில் அதிகமான மக்களால் பேசப்படும் மொழி நம் அனைவரும் நினைப்பது போன்று ஆங்கிலம் அல்ல. அது சீன மொழியாயாகும். சீன மொழி இன்று 75 கோடி மக்களுக்கு மேலானவர்களால் பேசப்படுகின்றது. ஆங்கிலம் இரண்டாவது இடத்தில் சுமார் 35 கோடி மக்களால் மட்டுமே பேசப்படுகின்றது. ஆனாலும் சீனமொழி அகில உலகத்திலும் ஒரு முக்கிய மொழியாகக் கருதப்படவில்லை காரணம் அம்மொழி மிகவும் குறுகிய பகுதியில் – கிழக்கு ஆசியாவில் மட்டும் பேசப்படும் மொழியாக உள்ளது. ஆங்கிலமோ எண்ணிக்கையில் குறைவாக இருப்பினும் எங்கும் பரவிய மொழி எனும் சிறப்பைப் பெற்று அகில உலக மொழிகளில் முதலாம் இடத்தைப்பெற்றுள்ளது.

இந்தியாவில் இன்றைய இந்தியின் நிலை இதற்கு ஒப்பானதுதான். அதிகமான மக்களால் பேசப்படுவதாக குறிப்பிடப்படும் இந்தி மொழியும் சில குறிப்பிட்ட பகுதிகளிலேயே அதிகமாகப் பேசப்படுகிறது. இநதியாவில் அதிக மக்கட் தொகை கொண்ட மாநிலங்கள் வரிசையில் முதலில் அமைவது உத்திரப் பிரதேசம் (88.341 144) அடுத்து பீகார் (56 353 369) மாநிலமாகும். இவ்விரு மாநிலங்களும் மொத்த இந்திய மக்கட் தொகையில் கால்பகுதிக்கு மேலாகும். (26 சதவீதம்) மற்றும் மத்தியபிரதேசம் ,இமாச்சல பிரதேசம், இராஜஸ்தான் அரியானா முதலியவைகளும் இந்தியைத் தாய் மொழியாகக் கொண்ட மக்களைத்தன்னகத்தே கொண்ட மாநிலங்கள் ஆகவே மொத்த இந்திய மக்கட் தொகையில் இந்தி பேசுவோர் தொகை எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுவதில் அதிசயமொன்றுமில்லை. ஆனால் இதை மட்டும் வைத்துக் கொண்டு இந்தியா முழுவதும் பரவலாக இந்தி பேசப்படுகிறது என்ற முடிவுக்கு வருவது மிகப் பெரிய தவறாகும்.

இதற்கொரு விளக்கம் கொடுக்கலாம் நான்கு பேர்கள் ஆளுக்கு நூறு ரூபாய் வீதம் நானூறு ரூபாய் வருமானம் பெறுவதாக வைத்துக் கொள்வோம். ஐந்தாவதாக ஒருவர் பத்து ரூபாய் மட்டுமே வருமானமாகப் பெறுகிறார். இந்த ஐந்து பேர்களின் சராசரி வருமானத்தைக் கணக்கிட்டால் அது 82 ரூபாய் ஆகும் பத்து ரூபாய் மட்டுமே வருமானமாகப் பெறும் அந்தப் பரம ஏழைகூட 82 ரூபாய் சராசரி வருமானம் உள்ளவனாகக் கணக்கிடப்படுவான். மேற்குறித்த கணிப்பும் இவ்வகையானதே.

ஆங்கிலம் தெரிந்தோர் இந்தியாவில் இரண்டு சதவீதத்தினர் மட்டுமே உள்ளனராம். ஆகவே அதனை இணைப்பு மொழியாக ஏற்க இயலாதாம். அப்படியெனில் தென்னாட்டில் இந்தியின் நிலை என்ன? தமிழ்நாடு, ஆந்திரம் கேரளம், கருநாடகம், புதுவை முதலிய தென் மாநிலங்களின் மொத்த மக்கட் தொகையில் (135,819,872) இந்தி பேசுவோர் எண்ணிக்கை (1,610,410) இரண்டு சதவீதத்துக்கும் (1.1 சதவீதம்) குறைவாகும். இந்தியாவில் ஆங்கிலம் எந்த நிலையில் உள்ளதாகச் சொல்லப்படுகின்றதோ அதற்கு எள்ளவும் குறைந்தது அல்ல தென்னாட்டில் இந்தியின் நிலை. இதற்கு என்ன சப்பைக் கட்டுக்கட்டுவார்கள்!...? இதை வைத்தே அவர்களைப் போலவே இந்தியின் நுழைவினை நாம் மறுக்கலாமே. ஆகவே இனியாவது பொறுப்பில் உள்ளவர்கள் புள்ளி விவரங்களை அள்ளித்தந்து பொருந்தாத விளக்கங்களை கொடுக்காமல் இருப்பார்களாக.

இந்தியாவின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் இந்தி மிகவும் அவசியமாம். ஆங்கிலத்திற்கு அந்தப் பங்கு இல்லையா? இந்த ஒற்றுமையும், ஒருமைப்பாடும் தேசியமும் எப்பொழுது பிறந்தன? எப்பொழுது வளர்ந்தன? சேர, சோழ பாண்டியர்கள் காலத்திலா? அசோகன் அக்பர் காலத்திலா? ஆங்கியேர்களிடம் நாம் அடிமைப்பட்டுக்கிடந்த 200 ஆண்டுக் காலத்திற்குள் ஏற்பட்ட உணர்வுகள்தானே இவை? இந்த உணவுகள் தோன்ற வளர ஆங்கிலேயர்கள்தானே நேரடியாகவோ மறைமுகமாகவோ காரணம். இதனை உணர்ந்தே குடியரசுத் தலைவர் சஞ்சீவரெட்டியார் கடந்த காலத்தில் ஆங்கிலத்தினாலேயே ஐக்கியம் ஏற்பட்டது. அதை அவசரப்பட்டு புறக்கணித்தால் நாடு பிளவுபடும்’ என்றுரைத்தார். அடுத்த பாராளுமன்ற கூட்டத்தில் இந்தியில் உரை நிகழ்த்தக்கூடாது எனக் கேட்டுக்கொண்டு திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி உட்பட 70 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொடுத்த அறிக்கைக்குப் பதில் அளிக்கும் போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

(Indain Express 23-2-78)

ஆங்கிலம் இன்றொரு இணைப்பு மொழியாக இருக்க இயலாது. ஏனெனில் அது ஒரு அந்நிய மொழி, அரசியல் சட்டத்தில் இடம் பெறாத மொழி என்று சொல்கின்றார்கள். ஆங்கிலம் ஒரு அந்நிய மொழியா? சற்றே சிந்திக்க. இந்திய மக்களில் ஒரு பிரிவினராகிய ஆங்கிலோ—இந்தியர்களின் தாய்மொழி எது? ஆங்கிலம்தானே! ஆங்கிலோ இந்திய சமூகத்தினர் மட்டும் இந்தியர்கள்; ஆனால் அவர்களின் தாய்மொழி மட்டும் அன்னிய மொழியாம். விசித்திரமாக இல்லை? அரசியல் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட 17 மொழிகளில் ஆங்கிலம் இல்லை. இந்நிலை மாற்றப்படவேண்டும். ஆங்கிலம் உடனடியாகச் சேர்க்கப்படவேண்டும். இந்திய சமூகத்தினரில் ஒரு பிரிவினரின் மொழி, மற்றவருக்கு அந்நிய மொழியானால் நம்மவருக்கு இந்தி மொழியும் அந்நிய மொழியே. இதனை நன்குணர்ந்திடவேண்டும். ஒருவனுக்குத்தாய் மொழியே தலையாய மொழியாகும். மற்றெல்லா மொழிகளும் இரண்டாம் மொழியே ஆகும். இந்நிலையில் தமிழனைப் பொறுத்தவரை ஆங்கிலமோ, இந்தியோ எதுவானாலும் இரண்டாம் மொழியே. இதில் எதைக் கற்பது சிறப்புக்குரியது?

இந்தி கற்றால் வட இந்திய மாநிலங்களுடன் தொடர்பு கொள்ளலாம். ஆனால் ஆங்கிலம் கற்றால் அகில உலகத்துடனும் தொடர்புகொள்ளலாம். இன்றைக்கு ஆங்கிலம் சுமார் 35 கோடி மக்களுக்கு மேல் பேசப்படுகின்றது. உலக மக்களில் பத்துப்பேரில் ஒருவர் ஆங்கிலம் தெரிந்தவராக இருக்கிறார்- பல பகுதிகளில் பரவி இருக்கின்ற காரணத்தால் கலாச்சாரம், வாணிபம், தொழில், அறிவியல் அரசியல் முதலிய பல்துறைகளிலும் சிறப்பிடம் பெற்றுள்ளது, ஆகவே எதனையும் அறிந்து, தெரிந்து, தெளிந்து கற்பதனையே எவரும் விரும்புவார் அதுவே அறிவுடைமையும் ஆகும். ஆனால் ஒன்று மட்டும் உண்மை. தமிழகத்துமக்களனைவரும் மொழியினை மட்டும் படிக்கமுன் வருவார்களானால், இரண்டென்ன இந்தியாவில் இருக்கின்ற அத்தனை மொழிகளையும் கற்கலாம். ஆனால் அது மட்டும் அவர்களின் பிழைப்புக்கு உதவாதே. அவரோடு பின்னிப் பிணைந்து வாழ்க்கையின் வளமாக இருப்பது அவர்கள் தொடர்பு கொண்டுள்ள வாணிபம், அறிவியல் அல்லது அரசியலாகும். அத்துறையினை மேலும் அறிவதற்கு அவர்களுக்குப் பிற மொழிகள் பயன்படலாம், அந்த அடிப்படையில் தான் அம்மொழியினை கற்க விரும்புவார்கள் அந்த அடிப்படையிலும் ஆங்கிலமே இந்தியைவிட ஆற்றல்மிக்கது, அதிகம் பயன்படக் கூடியது, பொருள் ஆழம் கொண்டது; போற்றுதலுக்குரியது.

— (தொடரும்)

## வீரசோழன்

## பதிலுக்குப்பதில்!

தி. மு. கழகத்தை வஞ்சம் தீர்ப்பதற்காகத் திட்டமிட்டு இந்தக் கொடுமைகள் (சென்னை மத்திய சிறைச்சாலைக் கொடுமைகள்) நடத்தப்பட்டுள்ளன,..

கதிரேசன் என்பவரை சிறையில் துணியை அவிழ்த்துவிட்டு ஓடச் சொல்லி இருக்கிறார்கள். அதற்குக் காரணமான அதிகாரியை அவிழ்த்து விட்டு மவுண்ட்ரோடு வழியாக ஓடச் சொல்லவேண்டும்.

— அம்பிகாபதி, ((வலது கம்யூனிஸ்டு எம்.எல் ஏ.)

## ‘கடவுள் அவதாரங்க’ளும் அரசியலும்!

கடவுளைப்போல, கடவுள் அவதாரங்களும் அதிகாரம் இருக்கும் இடத்தைத்தான் வட்டமிட்டுக் கொண்டிருப்பார்கள். அன்பையும் கருணையையும் ‘ உபதேசிக்கும் தேவாலயங்கள், ஜெர்மனியில் ஹிட்லர் பல இலட்சக் கணக்கான உயிர்களைக் கொன்று குவித்தபோது, சுட்டுவிரலை உயர்த்தியதுண்டா ?

இத்தாலியில் சர்வாதிகாரத்தைக் கட்டவிழ்த்துவிட்ட முசோலினிக்கு போப் ஆசீர்வாதம் தந்தார் !

காஞ்சி சங்கராச்சாரியிலிருந்து வீதி ஓரத்துச் சாதுக்கள்வரை இந்திரா காந்தி அதிகாரத்திலிருந்த போது அவருக்குத் துதிபாடி வந்தனர்.

இந்திராகாந்தி உறுதியாக ஒரு மூடநம்பிக்கைவாதி என்பதில் சந்தேகமே இல்லை.

இருந்தாலும் கொஞ்சம் பொது அறிவு அவருக்கு இருந்தது. இப்போது ஜனதா அமைச்சர்கள் இந்த மூட நம்பிக்கை விவகாரத்தில் இந்திராகாந்தியையும் தோற்கடித்து விடுவார்கள் போலிருக்கிறது.

பல இலட்சம் ரூபாயைப் பாழடித்து நடத்தப்பட்ட ஆமதாபாத் யாகத்துக்கு வாஜ்பாயும் ராஜ்நாராயணனும் நேரில் போய் அதனைக் கண்டுகளித்தனர்.

உலகநாடுகளிடம் இந்தியா உதவியைக் கேட்டுக் கொண்டிருக்கும்போது இப்படி யாகத்திற்குப் போய் அமைச்சர்கள் கலந்துகொள்வது கேலிக்கூத்தாகும்.

தன்னைக் கடவுள் என்று பறைசாற்றிக் கொள்ளும் சாயிபாபா அண்மையில் டில்லியில கலந்துகொண்ட ஒரு பிரார்த்தனைக் கூட்டத்துக்கு வாஜ்பாய் தலைமை வகித்திருக்கிறார். அப்போது வாஜ்பாய் பேசுகையில் அவசர நிலையின்போது பாபாவை வாஜ்பாய் சந்தித்ததாகவும், அப்போது பாபா, ‘ வாஜ்பாய், கவலைப்படாதீர்கள். தர்மம் ஜெயிக்கும்’ என்று கூறியதாகவும் கூறியிருக்கிறார்.

அவசர நிலையின்போதே இந்த பாபா அந்தக் கொடுமைகளை எதிர்த்து இந்த தர்ம உபதேசத்தைச் செய்திருக்கக்கூடாதா என்பதை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும். நாட்டில் அதர்மம் ஆட்சி செய்யும்போது இந்த அவதாரங்கள் மக்களிடம் கருணை காட்டியிருக்க வேண்டாமா ?

['காரவன்'—ஆங்கில ஏட்டின் தலையங்கச் சுருக்கம்]

# குரங்குகைப் பூமாலை!

## கு. மா. பாலசுப்பிரமணியம் எம்.எல்.சி.

"பூமாலை நீயே புழுதிமண் மேலே..." என்றொரு படப் பாடலை தி. மு. க. தலைவர் கலைஞர் பல்லாண்டுகளுக்குமுன்பே எழுதினார், அதன் உண்மையான பொருளை இப்பொழுது தான் தமிழ் மக்கள் உணர முடிகிறது! ஆம், குரங்கு கைப் பூமாலை மண்புழுதியில் புரள்வது போலவே, எம். ஜி. ஆர். கை ஆட்சியும் மனம் போனபடி புரள்வதைக் காண்கிறோம்!

முன்னாள் முதலமைச்சர்களான குமாரசாமி ராஜா, ஓமந்தூரார், ராஜாஜி. காமராஜர். பக்தவத்சலம், அண்ணா, கலைஞர் ஆகியவர்களெல்லாம் "எண்ணித் துணிக கருமம்—துணிந்த பின் எண்ணுவமென்பதிழுக்கு" என்னும் குறள் வழியில் ஆய்ந்தறிந்து திட்டங்களை அறிவித்தனர். "தேரான் தெளிவும் தெளிந்தான் கண் ஐயுறவும் தீரா இடும்பை தரும்" என்ற அச்சத்துடன் அரசியல் நடத்தியவர்கள்!

ஆனால், இந்நாளில் வாய்த்திருக்கும் முதலமைச்சர் எம். ஜி. ஆரோ. குறளையும் படித்ததில்லை, கொள்கையும் வகுத்ததில்லை. எண்ணித் துணிகின்ற முன்னறிவே இல்லாமல், 'தேரான் தெளிவு' என்னும் செருக்குடனேயே · திடீர் அறிவிப்புக்களையும் திடீர் மாற்றுதல் களையும் சர்வாதிகாரமாக நடத்திக்கொண்டிருக்கிறார்

1. முதல் அறிவிப்பு:— எம். ஜி. ஆர். நடிக்கும் புதிய படம்! தமிழக ஆளுநரே தொடங்கி வைப்பார்!-அடுத்த அறிவிப்பு:- எம். ஜி. ஆர். நடிப்பார்! ஆனால், ஆளுநர் வரமாட்டார்.

2. முதல் அறிவிப்பு:— எஸ். டி. சோமசுந்தரம் எம். எல். சி. ஆனார். (விரைவில் தமிழக அமைச்சராவார், - அடுத்த அறிவிப்பு:- எஸ். டி. சோமசுந்தரம் எம். எல். சி. பதவி ராஜிநாமா! இப்போது எம். பி. ஆகவே இருப்பார்!

3. முதல் அறிவிப்பு:- எம். ஜி. ஆர். சம்பளம் வாங்காமல் கலைவளர்ச்சிக்காகவே சினிமாவில் நடிப்பார்! அடுத்த அறிவிப்பு:- எம். ஜி. ஆர். சம்பளம் வாங்கி வரி பாக்கியைத் தீர்ப்பதற்காகவே நடிப்பார். பாடல்கள் உரையாடல் மூலம் கொள்கைகளையும் பரப்புவார்!

முன்னாள் அறிவிப்பு:-மாநில சுயாட்சிக்காக மத்திய ராணுவத்தை நடு வீதியில் சந்திக்கவும் எம். ஜி. ஆர். தயார்! இந்நாள் அறிவிப்பு:—ஏழை விவசாயிகளைப் பொசுக்குவதற்காக இந்திய ராணுவத்தை அழைக்கவும் தயார்!

இப்படியே, வேளைக்கு வேளை, வெவ்வேறு விதமான அறிவிப்புகள், காரணங்கள், தலைகீழ் மாற்றங்கள்!

'தாய்க்குலத்தை வாழவைப்பதே என் முதல் வேலை" என்று முழங்கிய எம். ஜி. ஆர். இதுவரையில் உழவர் போராட்டத் துப்பாக்கிச் சூட்டில் மட்டும், எட்டு உழவர் குலத் தாய்மார்களின் தாலியை அறுத்து 'வாழ்வைபழித்திருக்கிறார்'!

வேடசந்தூர் துப்பாக்கிச் சூட்டில் பலியான உழவன் துரைராஜின் மனைவி விஜயலக்ஷ்மி பிறந்து மூன்றே நாட்களான கைக்குழந்தையுடன் கதியற்ற நிலையில் கண்ணீர் வடிக்கிறாள். இதே நேரத்தில் எம். ஜி. ஆரோ, உடையைக் குறைத்து உடலழகு காட்டும் ஒய்யார நடிகையை ஒடிப் பிடித்துக் காதல் டூயட் பாடி நடிக்கிறார்!

"இனிமேல் கருப்புப்பணம் வாங்கமாட்டோம்" என்று ஏற்கனவே ஞானோதயச் சபதம் செய்தது போலவே, எம். ஜி. ஆர். "இனி மேல் காமரசமான விரசக் காட்சிகளில் நடிக்க மாட்டேன்" என்றும் சத்திய பிரமாணம் அறிவித்திருக்கிறார்!

அப்படியானால், ஏற்கனவே இவர் கருப்புப் பணம் வாங்கியதையும், காமரசக் காட்சிகளில் நடித்ததையும் ஒப்புக்கொள்வதாகத் தானே பொருள்? இனிமேல் 'அப்படிச் செய்பமாட்டேன்' என்று எம். ஜி. ஆர். வாக்களிப்பதனாலேயே இவர் மன்னிக்கப்பட வேண்டியவரென்றால் அவ்வாறே 'இனிமேல் வரிப் பாக்கி வைக்கமாட்டோம்" என்று உழவர்கள் வாக்[illegible]நாலும் அவர்களை மன்[illegible]விட வேண்டியது தானே நியாயம்? அப்படி உழவர்களை மன்னித்து வரிப் பாக்கிகளை மறந்து விடுவதற்கு எம். ஜி. ஆர். தயாரா?

எல்லாப் பாவங்களுக்கும்— குற்றங்களுக்கும் மொத்தக் குத்தகைக்காரரான எம். ஜி. ஆர். எப்படியோ ஏமாந்த மக்களின் ஆதரவால் இந்நாட்டின் முதலமைச்சராகி விட்டார்! அவர், விவசாயியாக— படகோட்டியாக— மீனவனாக- காவல்காரனாக— தொழிலாளியாக— நடித்தாரே,—வாரி வாரிக் கொடுக்கும் வள்ளலாகத் தோன்றிக் கைசிவந்து பேனாரே— இப்படிப்பட்டவரை அமைச்சராக்கினால், நடித்ததையெல்லாம் நடத்தியும் காட்டுவாரே — ஏழைக் குடும்பங்களை இன்பத்தில் மிதக்க வைப்பாரே —என்னும் தவறான நம்பிக்கையினால் அப்பாவி மக்களெல்லாம் அதிகமான வாக்குகளை அள்ளிக் கொடுத்து விட்டனர்.

ஆனால், இன்று எம். ஜி. ஆர். நடத்திக் காட்டுவதென்ன? ஏழைக் குடும்பங்களை இன்பத்தில் மிதக்கச் செய்யவில்லை; இரத்த வெள்ளத்திலேதான் மிதக்கச் செய்கிறார்! தன்னேச்சாதிகாரமான தலைக் கனத்தினால் தமிழ் நாட்டையே சுடுகாடாக்கிக் கொண்டிருக்கிறார்!

எதற்கெடுத்தாலும் ஆணவமான அறிவிப்பு; அடக்குமுறை, பொய் வழக்கு; போலீஸைக் கட்டவிழ்த்து விடுதல்! துப்பாக்கிச் சூடு! இராணுவத்துக்கும் அழைப்பு!

இத்தகைய கொடுமைகளைக் கண்ட ஏழை எளிய மக்கள் இப்பொழுதாவது தங்கள் தவறை உணர்ந்திருப்பார்கள் என்றே நம்புகிறேன். ஏனென்றால், விவரம் தெரியாதவர்கள் விரைவாக ஒரு முடிவுக்கு வரக்கூடியவர்கள். இருந்தால் இந்தப் பக்கம்— இல்லாவிட்டால் அந்தப் பக்கம் என்பதிலே உறுதியாக நிற்பவர்கள்! அதிகம் படித்த மேதைகளைப் போல அதிகம் குழம்பக் கூடியவர்களல்ல.

புத்தகப் பூச்சிகளான 'புத்திசாலிகள்' தான் இப்போது புதிர் நாடகமாடிக் கொண்டிருக்கிறார்கள்! இது தான் எனக்கும் புரியாத விந்தையாக இருக்கிறது. சட்டமன்றங்களில் உறுப்பினர்களாக இருப்பவரே இப்படிச் சந்தர்ப்ப வாதமாக நடப்பதைக் காணும்போது நான் ஆத்திரமாகவும் இருக்கிறது!

எம். ஜி. ஆர். ஆட்சியின் போக்குகளை எல்லா எதிர்க் கட்சிக்காரர்களுமே எதிர்த்துத்தான் பேசுகிறார்கள். பல்லவன் போக்குவரத்துத் தொழிலாளர், பொறியாளர், ஆசிரியர், மாணவர் மருத்துவத் துறையினர், மின் துறையினர் அரசுப் பதிவு பெறாத பணியாளர், மீனவர், உழவர் முதலிய அனைவர் பிரச்சினைகளிலும் அ. தி. மு. க. அரசு நடந்து கொண்ட ஆணவப் போக்கை எல்லா எதிர்க்கட்சி உறுப்பினர்களுமே சட்டமன்றத்தில் எதிர்த்துப் பேசினர்— கண்டித்து அறிக்கைகள் வெளியிட்டனர். போராட்டங்களுக்கு ஆதரவும் தெரிவித்தனர்! ஆனாலும் —?

ஆளுங் கட்சியின் தீர்மானத்தை எதிர்த்து வாக்கெடுப்பு என்ற நிலைமை வரும் போது மட்டும் அதே தீர்மானத்தைக் கண்டித்துப் பேசிய எல்லா எதிர்க்கட்சிக்காரர்களுமே அதே தீர்மானத்தை ஆதரித்தும் நெடுமரங்களைப் போல் எழுந்து நிற்கும் காட்சியைத்தான் நான் கண்டிருக்கிறேன்.

கண்டித்த கொள்கையின் படி - மறுத்த உறுதியின்படி—. எதிர்த்து வாக்களிக்க எழுந்து நிற்பவர்கள் எங்கள் தி- முகழக உறுப்பினர்களாக மட்டுமே இருக்கிறோம்!

மற்ற எதிர்க்கட்சிக்காரர்கள் ஆளுங்கட்சியின் தீர்மானத்தைப் பேச்சிலே மட்டும் ஏன் எதிர்க்கின்றனர்? வாக்கெடுப்பிலே மட்டும் எதற்காக ஆதரிக்கின்றனர்? அதிலே தான் இரகசியமமே அடங்கிக் கிடக்கிறது!

ஆளுங் கட்சியின் தீர்மானங்களை எதிர்க் கட்சியினர் ஆதரித்து வாக்களிப்பது அவர்கள் அபிமானத்தைப் பெறுவதற்காக! எப்போதாவது — ஏதாவது — ஒன்று கிடைக்காதா என்று எதிர்பார்ப்பதற்காக! ஆனால் அவர்களே காரசாரமாக எதிர்த்துப் பேசுவதெல்லாம் அவரவர் கட்சிக் கொள்கையை விளம்பரப் படுத்துவதற்காக! பத்திரிகைகளில் பெயர் வருவதற்காக! அவ்வளவுதான்!

'மாண்புமிகு' என்னும் பெயர் பெற்றவர்களே— எழுபது வயதைத் தாண்டியவர்களே— இப்படி ஏதோ ஒன்றை எதிர்பார்த்து, இரட்டை வேடம் தரித்து நடிக்கிறார்களென்றால் இந்த நாட்டை யார்தான் சீர்திருத்த முடியும்?

ஆனால் ஆளுங்கட்சியின் தீர்மானத்தை எதிர்த்து மாற்றுக் கட்சிகள் வாக்களித்து விடுவதனாலேயே, இந்த ஆட்சி கவிழ்ந்து விடாது என்பதும் எல்லாருக்கும் தெரியும்! அவக்கேடான வாய்ப்பினால் அரசு பலத்துடன் அமர்ந்து கொண்ட அ. தி. மு. க அரசு யார் எதிர்த்தாலும் குலைந்து விடாமல் அதன் போக்கிலேயே ஐந்தாண்டுக் காலம் அலங்கோலம் நடத்திபே தீருமென்பதும் புரியும்.

ஆனாலும், எதிர்க்கட்சிகள் எதிர்த்து வாக்களிக்கின்றன — ஆளுங்கட்சியின் போக்கை விரும்பவில்லை. என்ற ஒரு அறிவிப்பையாவது எம். ஜி. ஆரின் கும்பலுக்கு உணர்த்தலாமே. அதன் பிறகாவது அவர்கள் அடக்கத்துடன் செயல்படுவதற்கு அறிவுறுத்தலாமே! அந்த அளவுக்காவது எதிர்க்கட்சிகள் தன்னலத்தை மறந்து தன்னுறுதியைச் சுட்டிக் காட்டுவதற்கு இனியேனும் முன்வருமா?

அண்மையிலே மேலவைத் தலைவர். துணைத்தலைவர் பதவிகளுக்குத் தேர்தல்கள் நடக்கப் போகின்றன. அப்பொழுதாவது ஆளுங்கட்சி நிறுத்துகின்ற வேட்பாளர்களுக்கு எதிராக மற்ற எல்லா எதிர்க் கட்சிகளும் கட்டுப்பாடாக தங்கள் வாக்குகளை வழங்குவதன் மூலம் "சந்தர்ப்பவாதிகளையும் சர்வாதிகாரத்தையும் நாங்கள் ஆதரிக்க மாட்டோம்!" என்ற உள்ளுணர்வைத் துணிச்சலுடன் வெளியிடுமா? அந்த அளவுக்காவது மேன்மைக் குணமுள்ளவர்களைத் தான் மேலவை உறுப்பினர்கள் என்று நாம் பாராட்ட முடியும்.

---

★★★★★-★★★★★★

நம்
நாடு

### புதிய சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 25-00
ஆறுமாத சந்தா ரூ. 12-50
மூன்று மாத சந்தா ரூ. 6-25

மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

நிர்வாகி,
நம் நாடு,
அன்பகம். சென்னை-600018

★★★★★-★★★★★★

---

## ஜனதாவில் ஒரு 'அம்பிகாசோனி'

இந்திராவின் வீழ்ச்சிக்கு சஞ்சயின் தலைமையிலான இளைஞர் காங்கிரசின் அத்துமீறலான நடவடிக்கைகளும் முக்கிய காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

இப்போது ஜனதா கட்சியின் ஒரு பகுதியாக செயல்பட்டுவ நம் 'யுவ ஜனதா' இளைஞர் ஜனதாவின் நடவடிக்கைகள், இளைஞர் காங்கிரசின் பாணியிலே உள்ளன

ஜனதாவின் அரசியல் கொள்கைகளையும், குறைபாடுகளையும் விமர்சனம் செய்பவர்களை யுவ ஜனதாவினர்' தங்கள் பத்திரிகைகளில் மகா மட்டரகமான வார்த்தைகளில் திட்டுவதோடு நில்லாமல், தாக்கவும் தொடங்கி வருகிறார்கள்.

மார்ச் திங்கள் பதினெட்டாம் தேதி லக்னோவில் யுவ ஜனதாவினர் 'அணிவகுப்பு' நடத்திக் காட்டியபோது ராஜேந்திர சௌத்ரி என்ற பத்திரிகையாளர் அவர்களால் தாக்கப் பட்டார்.

ஆக்ராவின் யுவ ஜனதா இயக்கத்தைத் தன் கைப்பிடிக்குள் வைத்திருப்பவர், அழகான ஒரு இளம் பெண்! கடந்த காலத்தில் அவர் யஷ்பால் கபூருக்கும், இந்திராவுக்கும் மிகவும் வேண்டியவராக இருந்தவர். நடந்து முடிந்த பொதுத் தேர்தல்களின்போது காங்கிரசு சார்பாக நிற்க மனு அனுப்பினார். அது மேலிடத்தால் நிராகரிக்கப்படவே சுயேட்சையாக நின்று 'டெபாசிட்' இழந்தார்.

ஆக்ராவிலிருந்து அவர் தலைமையில்தான் லக்னோவில் யுவஜனதாவின் அணிவகுப்பு நடந்தது!

# சங்கிலிச் சாமி

**கருணாநிதி**

"சங்கிலியானந்த சாமிக்கு ஜே!"

"சங்கிலியானந்த சாமிக்கு ஜே! ஜே! ஜே!"

பக்தர்கள் குதித்தார்கள்; பரவசத்தால் நர்த்தனமாடினார்கள்; பரமானந்த கீதம் பாடினார்கள்.

"அஷ்டமா சித்துபுரி ஐயனே போற்றி! துஷ்டர் தம் துடுக்கடக்கும் தூயனே போற்றி! கஷ்டங்களைத் தீர்த்திடும் எங்கள் கண்கண்ட தெய்வமே போற்றி! போற்றி!"

இந்தப் பாடலை, சாமியாரின் சிஷ்யன் சம்பந்தம் உரக்கப் பாடினான் சம்பந்தத்தின் முக விகாரங்கள்......தானே வரவழைத்துக் கொண்ட அங்க சேஷ்டைகள் ...... போற்றிப் பாடலுக்குப் புது மெருகு கொடுத்துப் பக்தர் கூட்டத்தைப் புளகாங்கிதத்தில் ஆழ்த்தின.

'நமப் பார்வதி பதே' ஒரே பேரொலி; திடீரென அமைதி. சின்னப் பண்ணை முதலியார் சாமியாரின் பாதங்களைத் தொட்டுக் கும்பிட்டு மலர்களைத் தூவினார்.

பக்தர்களும்... பண்ணையாரைப் பின்பற்றிப் பாதபூசை செய்து...மலர்...... காசு...... பணம்...இவைகளால் அர்ச்சித்து நின்றனர், 'ஓம் சங்கரா சிவ' இந்த முணுமுணுப்போடு சங்கிலிச்சாமி தம்மை வணங்கி எழுந்தவர்களுக்கு ஆசீர்வாதம் வழங்கினார்.

பக்தர்கள் பலப்பல வகைகள்; கோரிய வரங்கள் பலப்பல ரகங்கள்.

"வழக்கில் வெற்றி பெறவேண்டும்"

"வாதநோய் தீரவேண்டும்"

"பிள்ளையில்லை............அருள் தேவை"

"கொள்ளை போய்விட்டது; கள்ளனைக் காட்டுக!"

எல்லாவற்றுக்கும் ஒரே மருந்து ...விபூதி; அதைச் சாமியார் தர, பக்தகோடிகள் வாங்கிக் கொண்ட காட்சியில் ஒரே பக்தி வெள்ளம்.

'சம்பந்தம்!' என்றார் சாமியார்.

'ஸ்வாமி' என்று அலறி விழுந்தான் சிஷ்யன், அதற்குள் சின்னப்பண்ணை முதலியார் கைகட்டி வாய் புதைத்துக் காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டார்.

"சங்கரன் உத்தரவிடுறான்; இன்றைய அருள் போதுமாம்" சங்கிலிச் சாமியாரின் இனிப்பான பேச்சு இது!

"அப்படியே சரி ஐயனே!" இது சம்பந்தம்.

"சாமி சயனிக்கப் போகிறது.. ஜனங்களெல்லாம் செல்லலாம்" இது முதலியார்.

'அவரைப் பாரு!...அப்படியே தேவலோகத்திலிருந்து குதிச்சு வந்தவரு மாதிரி இருக்கார்"

"செக்கச் செவேர்னு ....சிவ பெருமான் மாதிரி! அடடா! என்ன அருள்! என்ன அருள்! அந்தக் காவி ஆடைக்கும்...கருணை வழியும் முகத்திற்கும் கைலாசபதி வந்தது போல் இருக்கிறதப்பா!"

'பொம்பளைப் பக்கம் அவரு பார்த்துப் பேசும்போது அவரு வாயெல்லாம் புன்சிரிப்படி! ஆனா .....எலுமிச்சம் பழம் மாதிரி கொழு கொழுன்னு இருக்கார். எல்லாம் தெய்வப் பொறப்புடா, தெய்வப் பொறப்பு!"

"நம்மாத்துக்காரருந்தான் இருக்கார், நாலு வார்த்தை இப்படி அழகாப் பேசுவாரா?'

"டேய்......தீராத வினையெல்லாம் இவரு விபூதியினாலே தீருமடா."

"ஆள் சாமான்யமா? ஆயிரம் ஜனங்களை ஆபத்திலேயிருந்து காப்பாற்றினாரப்பா!"

"அதென்ன ஆபத்து?"

"இது தெரியாதா? ..இவருக்கு ஏன் சங்கிலிச்சாமின்னு பேரு தெரியுமா?"

"சங்கிலிக் கருப்பன் பூஜை செய்வார்."

"அட மூடம், அதில்லே ஒரு நாளு மெட்ராஸ் மெயிலு.. வெகு வேகமாக மெயில் மாதிரி போச்சாம்."

"எந்த ஊருக்கு?"

'மெட்ராசுக்கப்பா."

"உம்; சொல்லு?"

"நம்ப சாமியும் அதிலே இருந்திருக்கு சாமி..இருந்தாப் போல இருந்தது..'

"மறைஞ்சுட்டுதா?"

"இல்லப்பா...ரயிலில் இருக்கிற அபாய அறிவிப்புச் சங்கிலியைப் பிடிச்சு இழுத்திருக்கு.'

"உடனே ரயில் நின்று இருக்குமே!'

"ஆமாம்; ரயில் நின்றதும்... கார்டு வந்து 'யாரப்பா ரயிலை நிறுத்தியது?' அப்படின்னு கேட்டிருக்காரு"

"சாது என்ன சொன்னது?"

'நான்தனப்பா! தண்டவாளத்தில் ஆபத்தப்பா! உடனே போய்ப்பாராப்பா—என்று சொல்லியிருக்கு சாமி."

"ஆஹாஹா...என்ன சக்தி! என்ன சக்தி!'

"எல்லோரும் போய் தண்டவாளத்தைக் கவனித்துப் பார்த்தா........தண்டவாளத்தை வெட்டி.....ரயிலைக் கவுக்கச் சூழ்ச்சி பண்ணியிருக்கு"

"அடடா!"

"உடனே ஜனங்களெல்லாம்... சாமி காலில் சாஷ்டாங்கமாய் நமஸ்காரம் பண்ணி எங்களைக் காப்பாத்தின கடவுளேன்னு கட்டிப்பிடிச்சுகிட்டாங்களாம்"

"த்சு! த்சு!...சாஷாத் கடவுளை அவதாரம்! என்னமோ! இந்தக் கலிகாலத்திலே நமக்கெல்லாம் காணக் கொடுத்து வச்சிருக்கு'

"அதிலேருந்துதான் சங்கிலிச் சாமின்னு பேரு! நம்ப சின்னப்பண்ணை முதலியாரும்... அதே ரயிலில் இருந்திருக்காரு. அவருக்குச் சாமிமேலே ...ஒரு மோகம் விழுந்துட்டுது"

"ஓ......அதான்......முதலியார் இவ்வளவு தடபுடல் பண்றார்!...இல்லேன்னா... இந்தக் கருமி...இப்படிக் காசு செலவு பண்ணமாட்டாரே!"

சின்னப்பண்ணையின் மேல்மாடியில் பட்டு மெத்தை ஒன்றில் சங்கிலியானந்த சாமி சயனித்திருக்க...சம்பந்தம் அடிவருட... பண்ணைக்காரர்...... 'பங்கா' போட்டுக் கொண்டிருந்தார். இன்னொரு மெத்தையில் பண்ணைக்காரரின் குச்சு நாய் படுத்துக் கிடந்தது.

'ஓம்...சங்கரா சிவ'—சாமியாரின் வாயிலிருந்து கால்மணி நேரத்துக் கொருமுறை வெளிக் கிளம்பும் வார்த்தைகள் இவை!...

"என்ன முதலியார்!...நமது பயணம் விரைவில் நடைபெற வேண்டுமென்று பரமன் ஆணையிடுகிறானே"

"ஆண்டவன் ஆணையா?...... அவசியம் புறப்பட வேண்டும்"— சம்பந்தம் துடித்தான்

முதலியார் எழுந்து நின்று, "ஸ்வாமி நாளைக் காலையில் முழுவதும் வந்துவிடும். பிறகு அவ்விடத்து பிரயாணத்தை ஆரம்பித்தால்......" என்று முடிப்பதற்குள்...

'ஆகாது...ஆகாது; எம்பெருமான் சாமிகளைக் கோபிப்பார். அற்ப விஷயத்துக்காகச் சாமிக்கும், சாஷாத் பரமேஸ்வரனுக்கும் மனத்தாங்கல் ஏற்படக்கூடாது."

சம்பந்தம் தத்தோமென ஆடினான்; அவனைச் சாமியார் கையமர்த்தி, "சம்பந்தம்!... பொறு! முதலியார் நம்பால் காட்டும் அன்புக்கு நாம் அவரை ஏமாற்றக்கூடாது, சரி...சங்கரனிடம் ஒருநாள் தவணை கேட்கிறேன். முதலியாரே! இன்றுவரை எவ்வளவு கிடைத்திருக்கிறது?"

முதலியாரின் முகத்தில் களை உதயமாகிறது.

"ஸ்வாமி...ஆயிர ரூபாய் எடை தான் வெள்ளி கிடைத்திருக்கிறது. காலையில் ஆயிர ரூபாய் எடை வரும்."

"சந்தோஷம். மொத்தம் இரண்டாயிர ரூபாய் எடை. எல்லாவற்றையும் தங்கமாக்கிவிட்டால் ...... போதுமல்லவா?"

முதலியார் தோளைச் சொரிந்து கொண்டே தலையசைத்துப் பல் இளித்தார்.

சாமியாரின் நெற்றியில் சில சுருக்கங்கள் மின்னி மறைந்தன.

"சம்பந்தம்!"

"ஸ்வாமி!"

"நாளைக் காலை பூஜை முடிந்ததும் யாரும் மேல் மாடிக்கு வரக்கூடாது."

'உத்தரவு."

"நீயுந்தான்."

"ஆகட்டும்.'

"இரவு முழுவதும் நான் தனித்திருந்து சிவபூஜை செய்ய வேண்டும்."

"ஆக்ஞை ஸ்வாமி"

"முதலியார்...'

"ஸ்வாமி..."

"தெரிந்ததா?"

"ஆஹா..."

"இரவு பூஜை முடிந்து—மறுநாள் உதயமானதும் ..... நீர் மாடிக்கு வரவேண்டும்...... உமது விருப்பம் நிறைவேறியிருக்கும்...நீர் கேட்பது தங்கந்தானே?'

"ஆமாம்...அதைவிட உயர்ந்த தாய் ஆக்க முடிந்தாலும்..."

"கவனிப்போம்...வைரப் பாளமாகக்கூட ஆக்க முடியும், சிவனருள் எப்படி இருக்கிறதோ..!'

முதலியார் ஒரு கிண்ணம் பாலைச் சாமியிடம் நீட்டினார். அதைச் சிஷ்யன் சம்பந்தம் வாங்கிச் சாமியின் உதட்டில் வைத்தான்...

மறுநாட் காலையில் வழக்கம் போல் பூசையெல்லாம் முடிந்து...வெள்ளிக் கட்டிகளும் வந்து சேர்ந்தன.

சாமியார் அந்த வெள்ளிப் பாளங்களைக் கண்குளிரப் பார்த்து 'மூடாத்மா ஞானாத்மாவாக மாறுவது போல்—நாஸ்திகன் ஆஸ்திகனாய் மாறுவதுபோல் 'ஏ வெள்ளியே! நீ தங்கமாகப் போகிறாய்!'

இதைச் சாமியார் சொல்லும் பொழுது சம்பந்தம் தலையாட...முதலியார் முகமும் அகமும் மலர்ந்த காட்சி வெகு ரம்மியமாயிருந்தது.

சாமியார் பூஜை செய்ய உட்கார்ந்தார். சாம்பிராணிப் புகைச்சல், ஊதுவத்திகளின் மணம்...அரைத்த சந்தனத்தின் வாடை......மல்லிகை மாலைகள் தந்த குளிர்ந்த வாசனை......"மாடியில் ஒரு சொர்க்கலோகத்தையே சாமி உண்டாக்கிவிட்டது" என்றார் முதலியார்.

"சொர்க்கலோகம் இருந்தால் தானே சொக்கநாதன் வருவான்" என்றான் சம்பந்தம்.

முதலியாருக்கு இரவெல்லாம் ஒரேகனவு. தங்கமாக மாறிய வெள்ளிக் கட்டிகளின் பிரகாசம், அந்தத் தங்கக் கட்டிகளை உடைத்து வெளியூர் சென்று வியாபாரம் செய்வது, நல்ல விலைக்கு விற்ற பிறகு...பெரிய குபேரனாவது, குபேரன் ஆனதும் உள்ளூர்ப் பெரிய பண்ணையை ஏலம் செய்வது இந்தக் கனவுகளில் புரண்டு கொண்டிருந்தார்.

தங்கத்தை வியாபாரம் செய்யப்போன இடத்தில்......... போலீஸ்காரர் கையில் சிக்கி விட்டதாக ஒரு பயங்கரக் கனவால்...... பண்ணையர் பதறியடித்து எழுந்தார். கண்களை நம்ப முடியாமல் கசக்கிக் கொண்டார். பொழுது விடிந்தது. தங்கத்தைப் பார்ப்பதற்காக சம்பந்தத்தையும் அழைத்துக் கொண்டு மேல்மாடிக்கு ஓடினார்.

சாம்பிராணி வாடை நிரந்தரமாகப் பரவி...முதலியாருக்கு உற்சாகமான வரவேற்புக் கொடுத்தபடி இருந்தது. மாடியில் நுழைந்த முதலியார், "சாமி......சாமி—..." என்று கத்தினார். அவ்வளவு தான்; மூர்ச்சையாகிவிட்டார்.

சம்பந்தம் முதலியாரைத் தூக்கித் தேற்ற ஆரம்பித்தான். மாடியிலிருந்து தோட்டத்துப் பக்கம் தொங்கிக்கொண்டிருந்த அழுத்தமான கயிறு காற்றில் அசைந்தது. முதலியார் மூர்ச்சை தெளிந்து—சம்பந்தத்தை உற்றுப் பார்த்தார் அந்தப் பார்வையில் "ஹே சம்பந்தம்! இரண்டாயிர ரூபாய் எடை வெள்ளி போச்சே!" என்ற சோகம் பிரதிபலித்தது.

"பேராசை பெருநஷ்டம்' என்பது போலிருந்தது சம்பந்தத்தின் பதில் பார்வை.

"சம்பந்தம்! கருவாடு களவு கொடுத்த பாப்பாத்தி கதையாக அல்லவா என் கதை முடிந்துவிட்டது.'

"ஆமாம்...வெளியில் சொன்னால் வெட்கக்கேடு"

"ஜெயிலுக்குப் போகவேண்டுமப்பா'

'உம்...இந்தச் சண்டாளன் இப்படிப் பண்ணிவிட்டானே!'

"சம்பந்தம்...நீயும் இந்தச் சதிகாரனுக்கு உடந்தையா?"

"முதலியார்!......என்னை மன்னித்துவிடுங்கள். நானும் உடந்தையாகத் தானிருந்தேன். அந்தப் படுபாவி என்னையும் ஏமாற்றிவிட்டான்."

"பரமபக்தர்கள் போல் நடித்தீர்களே!"

"நடிக்காவிட்டால் நீங்கள் நம்புவீர்களா?'

'அடபாவி...ரயிலில் அவனைப் பார்த்தது முதல் என்னைச் சனியன் பிடித்துக் கொண்டதே!'

"சனியனல்ல! சரியான ஆசை பிடித்துக் கொண்டது. முதலியாரே! ஆசையால் விளைவது தானே ஆபத்துக்கள்."

"போதுமப்பா வேதாந்தம். உங்கள் வேதாந்தத்தைக் கேட்டுத்தான் இவ்வளவு விபரீதம்.'

"இனி நான் வேதாந்தம் பேசமாட்டேன். அந்தச் சூதனைத் தொலைக்க வழி தேடுவேன்".

'கடலில்போன என் சொத்து —இனிக் கரையேறுமா?;

"சம்பந்தத்தின் கப்பல்— ஒரு துரும்புவிடாமல் அரித்துக் கொண்டு வந்துவிடும். கலங்காதீர் முதலியாரே!"

'வெள்ளிக் கட்டிகளப்பா...... வெள்ளிக்கட்டிகள்"

"வைரக் கட்டிகளாகத் தருகிறேன். வியாகூலப் படாதீர்."

'ஏன்...உனக்கு ஏதாவது தங்கக் கட்டி வேண்டுமோ?'

"தவறாக என்னை மதிக்காதீர்... முதலியாரே!......என் கதையைக் கேட்டால் என்மீது பரிதாபப்படுவீர்."

"எந்த இழவையாவது சொல்லித் தொலை.'

"நான் ஒரு சாதாரண மனிதன்"

"அதுதான் தெரியுமே...';

'சங்கிலிச்சாமியும் ஒரு சாதாரண மனிதன்..."

"யார் இல்லையென்றது?"

"ரயில் விபத்திலிருந்து மக்களைக் காப்பாற்றினாரே...'

"அதில்தானே நானும் மயங்கிவிட்டேன்"

"நீங்கள் மட்டுமென்ன உலகமே மயங்கிவிட்டது!"

"ஜால வித்தைக்காரன் என்னமோ மந்திரம் பண்ணி மயக்கிவிட்டான்"

'மந்திரமல்ல......மகா பெரிய தந்திரம்."

'தந்திரமா?"

"ஆமாம், தண்டவாளத்தைப் பெயர்த்து வைத்தது யார் தெரியுமா?"

"அந்தக் கடியன்தானா?"

"இல்லை......நான்தான் முதலியாரே! இரவெல்லாம் கஷ்டப்பட்டுத் தண்டவாளத்தை உடைத்தேன். அவன் சங்கிலியைப் பிடித்து இழுத்துச் சாமியாராகிவிட்டான்."

"பிழைப்பதற்கு வழி......பிரமாதமாகத்தான் கண்டுபிடித்திருக்கிறீர்கள்."

"வழி பிரமாதந்தான்! அந்த வஞ்சகப் பயல் என் வாயிலும் மண்ணைப் போட்டுவிட்டானே!"

"சம்பந்தம...பேச நேரமில்லை. அவனைப் பழிவாங்க வேண்டுமே. என்ன யோசனை?"

"முதலியார்...... அருமையான யோசனை இப்பொழுதே மேல்மாடிக் கதவை மூடிவிடுங்கள்"

"ஏன்?"

"ஜனங்கள் வந்து...சாமியார் எங்கே? என்பார்கள் சாமி மேல்மாடியில் யோகானந்தம் புரிகிறது. கடவுளோடு பேசுகிறது கதவைத் திறக்க முடியாது என்று கூறிவிடுவோம்"

"இதைச் செய்தால் என் வெள்ளி வந்துவிடுமா?"

"வெள்ளியாலேயே நீர் வீடு கட்ட நான் வழி செய்கிறேன். நான் சொல்வதை முதலில் கேட்க வேண்டும்"

"சரி...கேட்கிறேன்."

"சந்தோஷம்! நான் இப்பொழுதே புறப்படுகிறேன்"

'நீ எங்கே போகிறாய் சம்பந்தம்?'

"நான் போகுமிடம் எனக்கே தெரியாது. ஒரு வாரத்தில் உமக்கு ஒரு பார்சல் வரும். அதை யாருக்கும் தெரியாமல் மேல்மாடியில் கொண்டு போய் உடைத்துப் பாரும்."

"நான் இழந்த வெள்ளிக் கட்டிகளின் பார்சலா?"

"ஆமாம்; நான் வருகிறேன். பார்சல் வரும் வரையில் மேல்மாடி திறக்கப்படக்கூடாது,'

சம்பந்தம் மறைந்துவிடுகிறான். முதலியார் முகத்தில் சிந்தனைக் கிறுக்கல்கள்! சங்கிலிச் சாமியார் நிஷ்டையில் இருப்பது ஊரெங்கும் பரவிவிட்டது.

'சாமி கடவுளோடு பேசுகிறது."

"ஒருவேளை சொர்க்கத்துக்குப் போனாலும் போய்விடும்!"

'சிவனோடு பேசுகிறாரோ? விஷ்ணுவோடு பேசுகிறாரோ? யார் கண்டது?'

"சக்தி பூஜைக்காரரப்பா! தேவியோடுதான்பேசுவார்."

சின்னப்பண்ணை முதலியாருக்கு ஒருநாள் ரயில்வே பார்சலில் ஒரு பெட்டி வந்துவிட்டது.

முதலியார் ஆவலோடு பெட்டியை வீட்டில் இறக்கச் சொன்னார்.

பெட்டியின்மேல் 'வாசனைப் பொருள்' என்ற எழுத்துக்கள் தீட்டப்பட்டிருந்தன.

இரவு எப்பொழுதுவரும் என்று முதலியார் ஏங்கிக் கிடந்தார்.

சில மணி நேரங்களில் இரவும் வந்துவிட்டது.

வேலைக்காரர்கள் எல்லாம் அன்று சீக்கிரம் வீட்டுக்கு அனுப்பப்பட்டார்கள்.

பார்சலில் இருந்து கமகம' வென்று வாசனை வந்து கொண்டிருந்தது.

திடீரென்று சம்பந்தமும் வந்து சேர்ந்தான்.

"சம்பந்தம்! எல்லாம் வெள்ளிக் கட்டிதானே!" என்றார் ஆவலாக முதலியார்.

சம்பந்தம் தலையாட்டிக் கொண்டே "ஆமாம், தூக்குங்கள்" என்று கூறினான் ஆணையிடும் தோரணையில்.

இருவரும் பார்சலைத் தூக்கினார்கள். உழைப்பு என்பது என்னவென்று தெரியாத முதலியார்...பெட்டியின் கனத்தி

(8-ம் பக்கம் பார்க்க)

## சங்கிலிச்சாமி....

(முதல் பக்கத் தொடர்ச்சி)

லிருந்து ஒருவாறு தெரிந்து கொண்டிருப்பார். வியர்வைத் துளிகள் சொட்டச் சொட்ட...மேல் மூச்சு வாங்க ... "அப்பாடா" என்று பார்சலை மாடியில் இறக்கினார்.

"வேலையின் கஷ்டம் தெரிகிறது" என்றான் சம்பந்தம் கிண்டலாக.

"வெள்ளியின் கஷ்டமப்பா!" என்று முதலியார் முனுமுணுத்துக் கொண்டார்.

சம்பந்தம் பார்சலை உடைக்க ஆரம்பித்தான். அவசரந் தாங்காத முதலியார், "அப்பா, சம்பந்தம்! அது வெள்ளிதானே?" என்று துடித்தார்.

"ஆமாம்" — சம்பந்தம் பெட்டியை உடைத்துவிட்டான். முதலியார் மூர்ச்சை போட்டு விழுந்துவிட்டார். பிறகு எழுநதார். அவர் அலறிவிடாமல் வாயைப் பொத்திவிட்டான் சம்பந்தம்.

பெட்டிக்குள் புழுபோலச் சுருண்டுகிடந்தது ஒரு மனித உருவம்.

ஆமாம் — சங்கிலிச் சாமியாரின் சடலந்தான் அது!

"என்னடா சம்பந்தம்?" முதலியார் பதை பதைத்துத் துடித்தார். "என் வெள்ளியும் போனதுமல்லாமல் என்னையும் கொலைகாரனுக்கிவிட்டாயே...அய்யய்யோ!"

"இல்லை...நாம் கொலைகாரரல்ல, ஆண்டவன் அடிமைகள்; பக்தாதி பக்தர்கள்."

சம்பந்தம் இதைச் சொல்லிக் கொண்டே சங்கிலிச் சாமியின் பிணத்தை எடுத்து நிஷ்டையில் இருப்பது போல் நீட்டி மடக்கிப் படுக்க வைத்தான். பக்கத்திலிருந்த விளக்கை ஏற்றிவைத்தான். முதலியாரை இழுத்துக் கொண்டு வெளியே வந்து மாடிக் கதவையும் மூடினான். முதலியார் மிரள மிரள விழித்தார்.

சம்பந்தம் மெதுவாகச் சொன்னான் :— "முதலியாரே! அஞ்சாதீர்! இரண்டாயிர ரூபாய் எடை வெள்ளியை நீர் இழந்தீர். இருபதாயிர ரூபாய் எடை நான் தருகிறேன்."

காலை மலர்ந்தது. சாமியார் நிஷ்டை கலையப் போகிறதாம். கதவைத் திறக்கப் போகிறார்களாம். கனவில் பண்ணை முதலியாரிடம் கதவு திறக்க உத்தரவாகிவிட்டதாம். இந்த விளம்பரத்தை யொட்டி முதலியார் வீட்டின் முன் ஒரே ஜனத்திரள்! கதவு திறக்கப்பட்டது. எல்லோரும் மேல் மாடிக்குச் சென்றார்கள். சம்பந்தம் [illegible] வெனக் கதறினான். முதலியாரும் அழுதார்..... இருவரும் நாடகத்தைத் திறம்பட நடித்தார்கள்.

அங்கே ஒரு கடிதம் கிடந்தது. அதில் —

நா[illegible] இனி இந்த நாற்ற [illegible]லுடன் வாழவிரும்பவில்லை. ஆவியாக [illegible]ந்து அருள்புரிவோம். [illegible]கள் என் சமாதியை [illegible]பட்டுச் சகலசம்பத்தும் பெறுவார்களாக!

இங்ஙனம்,
சங்கிலிச்சாமி.

என்று எழுதியிருந்தது. சம்பந்தம் அதைப் படித்துக் காட்டினான்.

ஏக ஆடம்பரமாகச் சங்கிலிச் சாமியின் சமாதி விழா நடைபெற்றது. சமாதியில் மக்கள் இறைத்த பணம் அன்றைக்கே ஆயிரம் ரூபாய்! அடுத்த ஆண்டு சங்கிலியானந்தசாமி குருபூஜை!

சாமிகளுக்கு மாபெரும் மடம் சம்பந்தம் மடத்தின் சாமி! முதலியார் மடத்தின் சொந்தக்காரர்! இரண்டாயிர ரூபாய் எடை வெள்ளிக் கட்டி நஷ்டம்!

ஆனால்...இருபதாயிரம் ரூபாய் எடை வெள்ளிக் கட்டி லாபம்! அதுவும் வளர்கிற லாபம்!...மக்களிடம் மடமை இருக்கும்வரை அந்த லாபம் குறையாது. ★

# புயல் - வெள்ளத் துயர்துடைப்பு நிதி!

## கழகத் தலைவருக்கு அனுப்பியோர் பட்டியல்!

புயலாலும் வெள்ளத்தாலும் பேரிழப்புக்குள்ளாகித் தவிக்கும் தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு உதவுவதற்காக, தலைமைக் கழக வேண்டுகோளுக்கேற்ப, புயல் நிவாரண நிதியாகக் கழகத் தலைவர் கலைஞர் அவர்களின் சென்னைச் சிறைச்சாலை முகவரிக்கு நாள் தோறும் நிதி குவிந்தது. நிதி அனுப்பியவர்களின் பெயர் அனுப்பிய தொகை ஆகிய விவரங்கள் 'முரசொலி' இதழில் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து இந்த வார முதல் 'நம்நாடு' இதழில் வாரந்தோறும் வெளியிடப்படுகின்றன.

6—2—78 தேதிய முரசொலி இதழில் வெளியிடப்பட்ட விவரங்கள் படி ரூ. 53 598—05

| | |
|---|---|
| முகவை சுந்தர்ராசன் (4·80) மயிலை எம். கருணாகரன், ஓமலூர் சி. நடேசன், ஆகிய 3 பேர் ரூ. 4/- வீதம் ... | 12—80 |
| ஆத்தூர் நா. வெங்கடேசன், மேட்டூர் பி. முருகேசன். வலங்கைமான் ஜி. இராமையா, ஜி கேசவன், எம். பழனியப்பன், ஹாஜா மொய்தீன், துவரங்குறிச்சி ஜே. முகம்மது யூசுப் ஆகிய 7 பேர் ரூ 3/-வீதம் ... | 21—00 |
| சென்னை-11 நல்லதம்பி, புரசை செ. இராச, கதிரவன், நீடாமங்கலம் கே. சையது, முகமது இக்பால், இராமதாஸ், எம். எஸ். சுல்தான், தூத்துக்குடி எம். முத்துமாலை நாகப்பட்டினம் வி. இருளப்பன் நீடாமங்கலம் வீர. மகாலிங்கம், பி. ஏ. ரகமதுல்லா, ராமநாதபுரம் ரத்தினகுமார் குப்தா, நாமக்கல் வி. வரதன், குடியேற்றம் பி. பாண்டுரங்கன் ஆகிய 13 பேர் ரூ. 2/-வீதம் ... | 26—00 |
| இராமநாதபுரம் இராசேந்திரன் (1—80) சிந்தலப்பாடி ஜி லோகநாதன், திருப்பரங்குன்றம் ஆ வேலு, எலாகுறிச்சி கோ. இராசாங்கம், எம். பழனிமுத்து, திருமானூர் கே. சூரிய உதயம் திருபபரங்குன்றம் வெ. லட்சுமணன், ஆ வீர சின்னம்மாள் ஆகிய 8 பேர் ரூ. 1/- வீதம் ... | 8—80 |
| சென்னை, இராயபுரம் சாரதா ... | 101—25 |
| சென்னை, சூளை புஷ்பவதி சீத்தாபதி, ... | 101—00 |
| கரூர் மு. சர்ப்புதீன் ... | 51—00 |
| நாகை 1-வது வார்டு ஆர். ஏ. துரைசாமி, ஈரோடு எம். கருப்பண்ணன், ஆகிய 2 பேர் ரூ. 25/- வீதம் ... | 50—00 |
| புதுவை-8 ஆ. வை. சண்முகம், கோவை-1 வி. கிருட்டிணன், திண்டிவனம் எம். வசந்தி சகோதரிகள். பழையவண்ணை ஜி. கணேசன், பாரி & கோ., எஸ் ஐம்புலிங்கம், சென்னை-5 டி. காசி, அமைந்தகரை ஏ. அர்ச்சுனன், ஆகிய 7 பேர் ரூ. 11/-வீதம் ... | 77—00 |
| சென்னை திருவல்லிக்கேணி ஆர். சாரதி (10—30), நீலகிரி கூடலூர் பசார் அந்தோனிசாமி (10—01) வடகோவை கு. வெ. சி. ஆசான், மே. மாம்பலம் வெ. அப்புத்தம்பி, மூலக்கடை பி மதிவாணன், திருச்சி பீமநகர் வி. பால சுப்பிரமணியன், ஆரணி அ. சுப்பிரமணியன், கோவை-2 சோசப்தாஸ், கோவை-1 எஸ்- ஏ. கபார், தில்லைநகர் கே. எஸ். அருணசலம், நாகை ஆ இராமசாமி, மதுரை-9 மு. மாயாண்டி சேலம்-4 சி. அய்யனூர். திருப்பூர்-4 ப, சண்முகம், சிங்கா நல்லூர் எஸ். கருணகரன் மதுரை எஸ் பழனிசாமி. தஞ்சை-1 பி. வீரப்பன், திண்டுக்கல்-1 எஸ். பி. எம். அப்துல்வகாப் ஈரோடு-1 டி. பெருமாள், திருப்பூர் வி இராமசாமி கொண்டித்தோப்பு வி ஆர். கஜேந்திரன், சென்னை-21 எம். எஸ். பகதூர் ஷெரிப், சென்னை-2, ஓ எஸ். கிருட்டிணன், விருகம்பாக்கம் எம் சி. கருப்பையா, சென்னை-2 எஸ். இராதாகிருஷ்ணன், பெரம்பூர் ப. இராசு, ஓட்டேரி எஸ் சுந்தரராசு ஆகிய 27 பேர் ரூ 10 விதம் ... | 270—31 |
| தண்டையார்பேட்டை இரா. மு. பாலன் ... | 6—00 |
| சென்னை-13 ஏ. துரை (5—55), ஆத்தூர் வி. சீனுவாசன் (5—50), கோவை காந்திபுரம் எஸ், பெரியசாமி கோவை-1 சி. இராமலிங்கம், செங்கை சின்னநத்தம் ப. வானசுந்தரம், வெள்ள கோவில் அப்புக்குட்டி, ஆர் பி எஸ். மணி காட்டூர் ஏ. எஸ். மணியம், வெள்ள கோவில் இரா. பெரியசாமி, கே. பெரியசாமி, திருச்சி-8 பா. அப்துல்கனி, பாலக்கரை இராயப்பன் ஆகிய 12 பேர் ரூ. 5/- விதம் ... | 61—05 |
| சென்னை, புரசை எம். முத்துராமன் ... | 2—00 |
| திருவள்ளுவர் நகர் ஆர். பலராமன் ... | 11—00 |
| ஆந்திரா மதனப்பள்ளி என். பி. துரை, எஸ். வேணுகோபால் ஆகிய 2 பேர் ரூ. 10/- வீதம் ... | 20—00 |
| சித்தூர் இ. பி. இராசசேகரன் ... | 5—00 |
| இடுக்கி வண்டிப் பெரியார் இராம. நடராசன், ... | 11 - 00 |
| ,, வி. முத்தையா. கே. அப்துல்சலாம் ஆகிய 2 பேர் ரூ 10/-வீதம் ... | 20—00 |
| ,, கே எம். ஷெரீப் கே. இப்ராகிம், கே. சாகுல் அமீத் எம் முகமது, எம். குருதாஸ் ஆகிய 5 பேர் ரூ 5/- வீதம் ... | 25—00 |
| கோட்டையம் பி. பார்த்தசாரதி ... | 25—00 |
| பாலக்காடு என். முருகன் ... | 11—00 |
| திருவனந்தபுரம் கே. எஸ். சிவம் ... | 5—00 |
| பெங்களூர்-2 பா. வே. வே. ச. த. மாரிபாண்டியன் ... | 100—00 |
| பெங்களூர்-5 ஏ. பி. சுப்பிரமணியம், பெங்களூர்-10 என். ஜே. ஜெபராமன் ஆகிய 2 பேர் ரூ. 25/- வீதம் ... | 50—00 |
| மைசூர் கோலார் நடராசா மெட்டல் ஸ்டோர் ... | 11—00 |
| பெங்களூர் கருநாடக திராவிடர் கங்கம் பெரியார் தொண்டன் ... | 10—00 |
| பெங்களூர்-2 ஏ. லியாகத்தலி, மாதவி ஜெயராமன் - கோலார் தங்கவயல் எம். சம்பத். பெங்களூர்-1 கி. சோழன், பெங்களூர்-25 வ. த. கிருட்டினன், பெங்களூர்-53 வி. என். திருவேங்கடம் ஆகிய 6 பேர் ரூ. 10- வீதம் ... | 60—00 |
| பெங்களூர்-2 ஜெயராம் ... | 6—00 |
| பெங்களூர்-5 ஆர். ராகவன், என். காசிநாதன் இராசமாணிக்கம், எம். ஆறுமுகம், நாராயணமூர்த்தி மூர்த்தி, ஏ. சுப்பிரமணி, கோலார் தங்கவயல் கே. பொன்னுசாமி, எஸ். எம். இராமலிங்கம் ஆகிய 9 பேர் ரூ 5/- வீதம். ... | 45—00 |
| அந்தமான் போர்ட் பிளேயர் பி. எம். அப்துல் சமத் ... | 21—00 |
| ,, ஏ. எஸ். தாவூத் என். ஏ. அய்யா ஆகிய 2 பேர் ரூ. 11/- வீதம் ... | 22—00 |
| ஆந்திரா ஸ்ரீ லட்சுமி விலாஸ் நா, வரதராசர் ... | 25—00 |
| சென்னை-33 உடன் பிறப்பு ... | 20—00 |
| ஸ்ரீ சைலம கே. எம். ஏ அஜிஸ் ... | 12—00 |
| மாயூரம் ஆர். பிரபு ... | 11—00 |
| ஆதிவாரப்பட்டு ஜே. பீட்டர் & காதர் சுலைமான் ... | 10—00 |
| விஜயவாடா ஜி. கருப்பையா ... | 5—00 |
| ஆக மொத்தம் ரூ ... | 54 927—26 |

### 'நள்ளிரவில் சுதந்திரம்!'

மிகுந்த சர்ச்சைக்குள்ளான 'நள்ளிரவில் சுதந்திரம்' (Freedom at midnight) என்ற புத்தகம் இதுவரை உலகத்தின் முக்கியமான இருபத்தாறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அதன் பதிப்புரிமையை வாங்குவதற்காக பல புத்தக நிறுவனங்கள் போட்டி போட்டுக் கொண்டிருக்கின்றன, அப்புத்தகத்தை எழுதிய இருவரில் ஒருவரான 'டொமினிக்யூ லேப்பியரிடம்' — 'இப்புத்தகத்தின் மூலம் நீங்கள் எவ்வளவு பணம் ஈட்டியுள்ளீர்கள்?' என்று கேட்டபோது அவர் சொன்ன பதில், "எவ்வளவு என்று இன்னும் எனக்கே தெரியவில்லை" என்பதுதான்.

# காஷ்மீரத்துச் சிங்கத்தின் ஆணித்தரமான கருத்துக்கள்

[காஷ்மீரத்துச் சிங்கம் ஷேக் முகம்மது அப்துல்லா அவர்கள், அதிகாரங்களைப் பரவலாக்க வேண்டும் என்ற கோரிக்கையை நெடுங்காலமாகத் தீவிரமாக ஆதரித்து வருபவர். தற்போதைய முறை குறித்து 'சண்டே' ஆங்கில வார இதழுக்கு அவர் அளித்துள்ள இந்தச் சிறப்புப் பேட்டியில், "தும்முவதற்குக்கூட மத்திய அரசின் அனுமதியைப் பெறவேண்டியதிருக்கும் இன்றைய நிலை மாற வேண்டும்" எனக் கூறுகின்றார்.]

கேள்வி: எளிமையான தெளிவான கேள்வி ஒன்றுடன் இப்பேட்டியைத் தொடங்கலாம்: மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் ஏன் வேண்டும்?

பதில்: முறையாகச் செயல்படுவதற்குத்தான்.

கே: அதைச் சற்று விளக்கமாகக் கூறுவீர்களா?

ப: அதிகாரங்கள் இல்லாவிட்டால், மக்கள்பால் நமக்குள்ள கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்ற இயலாது.

கே: மாநிலங்களின் பணிகளில் மத்திய அரசு குறுக்கிடுகிறதா?

ப: இதைக் குறுக்கீடு என்ற பிரச்சினையாகக் கொள்வதற்கில்லை. சில முன் முயற்சிகளை மாநிலங்களிடம் விட்டு விடுவதே இந்தப் பிரச்சினையாகும். எல்லாவற்றிலும் மத்திய அரசே முனைவு காட்டுவது என்பது மாநிலங்களின் தலைமை வளர்வதற்கு வாய்ப்பு ஏற்படாது.

கே: இன்றைய ஆட்சிமுறையின் பெரும் பலவீனங்களில் ஒன்று இந்த நிலை என்று கருதுகிறீர்களா?

ப: நமது அரசமைப்பு, கூட்டாட்சி முறையிலோ தனியாட்சி முறையிலோ அமைந்ததன்று என்று பிரதமர் கூறியிருக்கிறார்.

இது குழப்பத்தை உண்டாக்குகிறது. ஏனென்றால், இவ்விரு முறைகளின் அம்சங்களுமே நம் அரசமைப்பில் இணைந்திருக்கின்றன. ஆகவே உதாரணமாக, அதிகாரத்தில்—அதிக அதிகாரத்தில்—ஆர்வம் கொண்ட ஒருவர், மத்தியில் ஆட்சிக்கு வருவாரானால், அவர், அரசமைப்பிலுள்ள அந்தப் பலவீனத்தைத் தனக்குச் சாதகமாக எடுத்துக்கொண்டு, எல்லா அதிகாரங்களையும் தன் வசப்படுத்திக் கொள்ளலாம். அப்போது சர்வாதிகாரம் ஏற்படும் அபாயம் உண்டாகும். நமது அண்மைக் கால அனுபவம், அதைத்தான் உணர்த்தியிருக்கிறது. நெருக்கடி நிலைக்கான வகைமுறைகள் அனைத்தும் அரசமைப்பிலேயே இருந்திருக்கின்றன. நிகழ்ந்தனவெல்லாம் அரசமைப்புக்குப் புறம்பானவையென யாரும் சொல்ல முடியாது. ஆனால், அரசமைப்பு, தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளப்பட்டது. மாநிலங்கள் மதிப்பில்லாதவையாக ஆக்கபபட்டன. முதலமைச்சர்களும்—மற்ற அமைச்சர்களும் — மத்தியிலிருந்து திணிக்கப்பட்டார்கள். தாங்கள் விரும்பும் தலைவரைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் உரிமை, மாநிலச்சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படவில்லை. முதலமைச்சரை மத்திய அரசேதேர்ந்தெடுத்த போதும் அவருக்கு தம் சக அமைச்சர்களைத்தேர்ந்தெடுத்துக் கொள்ளச் சுதந்திரம் அளிக்கப்படவில்லை.

இதனால், குழப்பங்கள்விளைந்தன. நிருவாகத்தையும், வளர்ச்சிப்பணிகளையும் கவனிப்பதற்கு முதலமைச்சர்களுக்கு நேரமே கிடைக்கவில்லை.

கே: மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரங்கள் கொடுக்க வேண்டுமெனத் தனது தேர்தல் அறிக்கையில் தெளிவாக உறுதிமொழி கொடுத்திருந்த ஜனதா அரசு, அந்த வாக்குறுதியைப் பறக்கவிட்டு விட்டதென நீங்கள் கருதக் காரணமென்ன?

ப: ஜனதாவின் தேர்தல் அறிக்கையை நான் ஆழ்ந்து படித்தேன். அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பது இதுதான்: "மக்களால் நடத்தப்படும் மக்கள் அரசில், அதிகாரங்கள் ஒரேயிடத்தில் பெருமளவில் குவிந்திருப்பது, ஜனநாயகத்திற்கே முரணானது......எனவே, பொருளாதார மற்றும் அரசியல் அதிகாரங்களைப் பரவலாக்கும் ஓர் ஆட்சிமுறையில் இக்கட்சி நம்பிக்கை கொண்டிருக்கிறது. மேம்பாட்டுப்பணிகளிலும் நிருவாகத்திலும் தனி நபர் ஈடுபாட்டுக்கும் மக்கள் பங்குபெறுவதற்கும் இதுஇன்றியமையாதது".இவ்விதம் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஒருவர் ஆட்சிக்கு வந்ததும், என்ன நிகழும் என்பதை என்னால் ஊகிக்க முடியவில்லை.

கே: இந்தப் பிரச்சினை குறித்து விவாதம் நடத்துவதைக்கூட மெரார்ஜிதேசாய் விரும்பவில்லை. அவர் இவ்விதம் கடுமையான ஒரு நிலையை எடுத்திருப்பதற்கு என்ன காரணம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

ப: நம் நாட்டில் எத்தனையோ புதிர்களைச் சந்திக்கிறோம். அதில் இதுவும் ஒன்று என்றுதான் சொல்லவேண்டும் (சிரிக்கிறார்). விவாதிப்பதற்கு எதற்காக எவரேனும் பயப்படவேண்டும் என்பது புரியவில்லை. இந்தக் கோரிக்கையை எழுப்புகிறவர்கள் கூட. மத்திய அரசை எந்த விதத்திலும் பலவீனப்படுத்த விரும்பவில்லை என்றுதான் சொல்கிறார்கள். நாட்டுக்கு மத்திய அரசு செய்யவேண்டிய கடமைப் பொறுப்புகளைச் செய்வதற்கு அதற்குப்போதிய அதிகாரங்கள் வழங்கப்படவேண்டுமென அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால், அதற்கு அப்பால், எல்லா முன் முயற்சிகளையும் மாநில அரசுகளுக்கே விட்டுவிட வேண்டும். மாநில அரசுகள் மத்திய அரசின் அரவணைப்பில் இருப்பவைதானே! அவற்றிடம் சில முன் முயற்சிகளை விட்டுவிட்டால். அவைகளுக்கும் அனுபவம் உண்டாகும். அப்பொழுது, மாநில அரசுகளிலிருந்து திறமையும் அனுபவமும் வாய்ந்தவர்கள் மத்திய அரசுக்கு எடுத்துக்கொள்ளப்படலாமே!

கே: இந்தப் பிரச்சினையில் தற்போதுள்ளவர்களின் மனப்போக்கைவிட நேருவின் போக்கு முற்போக்கானதாயிருந்தது எனக் கருதுகிறீர்களா? நேருவின் காலத்தில் சக்தி வாய்ந்த முதலமைச்சர்கள் இருந்தார்கள் என்ற உண்மையை மறுப்பதற்கில்லையல்லவா?

ப. அது உண்மைதான். ஆனால், அப்போதிருந்த நிலைமை வேறு. நமக்குச் சுதந்திரம். பல தொல்லைகளுடன் வந்தது. நாடு பிரிவினையாகியது; இராணுவம் பிளவுற்றது; திருவாகப் பணிகள் பிரிவினையாகின. எங்கும் குழப்பம் நிலவியது. எனவே, அப்போது அரசமைப்பின் கூட்டாட்சித் தன்மைக்குத் தலைவர்கள் அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லையென்றால், அதைப் புரிந்துகொள்ள முடிந்தது. குழப்பத்தை ஒடுக்கும் பொறுப்பை மத்திய அரசு அப்போது ஏற்றிருந்தது. அப்போது தலைவிரித்தாடிய பிரிவினைச் சக்திகளை ஒடுக்குவதற்கு, மத்திய அரசுக்குக் கூடுதல் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. ஆனால், 30 ஆண்டுகளுக்குப் பிறகு நிலைமை மாறிவிட்டது. உறுதிநிலை மீண்டுவிட்டது. வலிமை வாய்ந்த இராணுவத்தை வைத்திருக்கிறோம். நிருவாகப் பணிகள் ஒழுங்காக அமைக்கப்பட்டுவிட்டன. மற்றத் தொல்லைகளும் நீங்கிவிட்டன. ஆகவே மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு அதிகாரங்களை மாற்றுவதற்குரிய தருணம் வந்து விட்டது.

கே: குறிப்பாக நெருக்கடி நிலை அனுபவத்திற்குப் பிறகு?

ப: ஆம், முக்கியமாக நெருக்கடி நிலைக்கால அனுபவத்திற்குப்பிறகுஇந்நிலை ஏற்பட்டுள்ளது. அந்தக் குறைபாடுகள் நீக்கப்படவேண்டும். இந்தப் பிரச்சினைபற்றி விவாதிக்க வேண்டுமென்ற கோரிக்கையைக் காதில் போட்டுக்கொள்ள மறுப்பவர்கள், மக்களிடம் தங்கள் கருத்தைச் சொல்லி ஏற்றுக்கொள்ளும்படி செய்யட்டுமே' அதற்குத்தான் அவர்கள் மறுக்கிறார்கள். விவாதிக்கவேண்டாமாம்; ஆனால், தனிப்பட்ட முறையில் கருத்துகளைத் தெரிவிக்கலாமாம். இது தனிப்பட்ட பிரச்சினை அல்ல; மொரார்ஜி தேசாய்க்கும் ஒரு சில தலைவர்களுக்குமிடையிலான தனிப்பட்ட பிரச்சினை. அல்ல; இதைப் பொதுமன்றத்தில் தான் விவாதிக்கவேண்டும். நான் சொல்வது தவறாக இருக்கலாம். 'இது சரியான நிலை அன்று; அதுதான் சரியானது' என்று யாராவது எனக்கு எடுத்துக்கூறலாம். ஆனால்,குறைபாடுஇருக்கிறது இந்தக் குறைபாடு நீக்கப்படவேண்டும்; இன்றுள்ள உறவுகள் சீராகச் செயல்படாது என்பதை எனது அனுபவம் காட்டியிருக்கிறது. 30 ஆண்டுகளுக்குப் பிறகு நம்மிடம் ஒரு பெரும் பிரச்சினை இருக்கிறதென்றால், அது உட்பூசல்தான். மாநில அளவில் முறையாகசெயல்பட நாங்கள் அனுமதிக்கப்படவில்லை. மத்திய அரசு ஆட்டுகிறபடி நாங்கள் ஆடிக் கொண்டிருக்கிறோம். யாரேனும் அதிக அனுபவம் உடையவர் இருந்தால அவர் விரும்பியதெல்லாம் பெற்றுக்கொள்கிறார். மற்றவர்கள் பெறுவதெல்லாம் மிச்சம் மீதிதான்.

கே: மத்திய அரசின்தயவுக்காளானவர் அதிக நிதியைப் பெற்றார். அப்படித்தானே?

ப: அத்தகையவர்க்கு நிதி மட்டுமல்ல; எல்லா நன்மைகளுமே கிடைத்தன. அவருக்குச் சுதந்தரமும் கிடைத்தது. அவர் தன் மாநிலத்தில் சுதந்திரமாகச்செயல்படவும் முடிந்தது. உட்பூசல் தொல்லைகளும் அவருக்கு இருக்கவில்லை.

கே: மாநில அரசுகளுக்கு அதிகாரம் கொடுந்தால் நாடெங்கிலும் குட்டிச் சர்வாதிகாரிகள்—பற்பல பன்சிலால்கள் — தோன்றக்கூடிய அபாயம் ஏற்படாதா?

ப: இல்லை அது எப்படி முடியும்? மத்திய அரசின் முழு ஆதாரவுடன்தானே பன்சிலால் செயல்பட்டார்!

கே: ஒரு மாநில அரசைப் பதவியிலிருந்து விலக்கும் அதிகாரம மத்திய அரசுக்கு இருக்கவேண்டுமெனக் கருதுகிறீர்களா?

ப: இல்லை. ஒரு சில சந்தர்ப்பங்களில்—ஒரு சில மோசமான சந்தர்ப்பங்களில்—மட்டுமே அவ்வித அதிகாரம் இருக்கலாம். ஆனால் இறுதியில் மாநிலச் சட்டமன்றம் தான் அந்த அதிகாரத்தைப் பெற்றிருக்க வேண்டும். மாநில அரசாங்கத்தை அம்மாநிலச் சட்டமன்றம் முழுமையாக ஆதரிக்கிறதென்றால். அந்த மாநில அரசை மத்திய அரசு எவ்வாறு

(10-ம் பக்கம் பார்க்க)

அரிய வாய்ப்பு, குறுகிய சந்தர்ப்பம்!

எங்களது தவணைமுறை
திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுங்கள்!

**எம். கே. டிரேடர்ஸ்,**

41, ரங்கராஜபுரம் ரோடு, கோடம்பாக்கம், சென்னை-24.

—: கிளை :—

50, ஏரிக்கரைத் தெரு. மேற்கு மாம்பலம், சென்னை-33.

எங்களிடம் ரேடியோ, டிரான்சிஸ்டர், ஸ்டீல்பீரோ, சைக்கிள் சோபா, மின்விசிறி மற்றும் வீட்டுக்கு தேவையான எல்லா பொருட்களும் ரொக்கத்திற்கும் தவணை முறையிலும் கிடைக்கும்.

உரிமையாளர் :— O. Y. A. முகமது மைதீன்.

# காஷ்மீரத்து....

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

பதவியிலிருந்து நீக்கமுடியும்? மாநில அரசு என்பது, சட்ட மன்றத்திற்குக் கட்டுப்பட்ட ஒன்றுதானே!

கே: மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுத்தால், ஒற்றுமை குன்றும், நாடு துண்டுபடும்'' என்ற பல்லவியை எப்பொழுதும் கேட்கின்றோம். திருமதி காந்தி இந்தப் பல்லவியை அதிகமாகவே பாடினர்.

ப: தற்போதைய முறையினால் தான் நாடு துண்டுபட வழியுண்டாகும். மாநிலங்களுக்குத் தலைமைச் சுதந்திரம் மறுக்கப்படும். ஏனென்றால் அனைத்தும் தலைமறைவாகி போராட்டங்கள் தலைதூக்கும். இப்பொழுது — முக்கியமாக நெருக்கடி நிலைக்குப்பிறகு— மக்கள் விழிப்படைந்து விட்டார்கள். இந்த முரண்பாடுகளையெல்லாம் ஜனதா அரசு அகற்றிவிடுமென மக்கள் எதிர்பார்த்தார்கள். மக்களின் கருத்தைத்,தான் பிரதிபலிப்பதாகவாவது ஜனதா கட்சி நிரூபிக்க வேண்டும்.

கே: இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு உடனடியாகச் செய்ய வேண்டியது என்ன என்பதைக் குறிப்பிட்டுச் சொல்வீர்களா?

ப: பல்வேறு கருத்துகளுக்கு அவர்கள் திறந்த மனதுடன் செவி சாய்க்க வேண்டும். முதலாவதாக, முப்பதாண்டுகளுக்கு முன்னர் நாம் இயற்றிய இந்திய அரசமைப்பை மறுபரிசிலனை செய்ய வேண்டியது அவசியமல்லவா என்று பார்க்க வேண்டும். நமது அரசமைப்பு சில தனிப்பட்ட சூழ்நிலைகளில் உருவாக்கப் பட்டது. அத்தகைய சூழ்நிலை இன்று இல்லை. அப்பொழுது, உளவியல் மற்றும் அரசியல் சார்ந்த சில நிர்ப்பந்தங்கள் இருந்தன. 30ஆண்டுகளுக்குப் பிறகு அரசமைப்பை மறுபரிசிலனை செய்வதால் என்னதான் தீங்கு உண்டாகிவிடும்? அந்த அரசமைப்பு அப்படியொன்றும் ஆண்டவனால் எழுதப்பட்டதல்லவே? மனிதர்களால் இயற்றப்பட்டது தானே! அது போகட்டும். இப்பொழுது அதை மறுபரிசிலனை செய்வது எப்படி? இந்தப் பிரச்சினை ஏற்கனவே எழுப்பப்பட்டுள்ளது. இரண்டாவது அரசியல் நிர்ணய சபை ஒன்றை அமைக்க வேண்டுமெனச் சிலர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அப்பொழுது, இக்கருத்தை எதிர்த்தவர்கள், இன்றைய நிலையில் இவ்விதம் செய்தால் நாட்டில் இன்னும் அதிகமான குழப்பமும் கொந்தளிப்பும்தான் ஏற்படும் என்று வாதிட்டார்கள். அரசியல் நிர்ணய சபையை அமைக்கும் யோசனையை விட்டு விடுவோம் என்று நான் கூறுகிறேன். சட்ட பூர்வமான ஆணையம் ஒன்றை அமைப்பதில் ஏதேனும் சங்கடம் உண்டா? 60 கோடி மக்கள் கொண்ட இந் நாட்டில் நேர்மைத் திறனும் மக்களின் நம்பிக்கையும் அரசமைப்புச் சட்டத்தில் ஆழ்ந்த புலமையும் வாய்ந்த ஐந்து அல்லது ஆறு அல்லது பத்து நிபுணர்களைத் தேர்ந்தெடுக்க இயலாதா? அவர்களை, இந்தப் பிரச்சினையை ஆராய்ந்து, பல்வேறு கருத்துக்களைக் கேட்டறிந்து, உரிய திருத்தங்களை அரசுக்குத் தெரிவிக்கும்படி கேட்கலாகாதா? அவர்கள் அளிக்கும் அறிக்கையை நாடாளுமன்றத்தில் அளிக்கலாம். நாடாளுமன்றம் அதுபற்றி விவாதிக்கலாம். இதுபோல் எத்தனையோ வழிமுறைகள் உண்டு; வேண்டியதெல்லாம் மனம்தான் — திறந்த மனம். 1947இல் தனிவகைச் சூழ்நிலைகளில் அரசமைப்பு ஆக்கப்பெற்றது என்ற உண்மையை ஏற்றுக் கொள்வதற்கும் மனம் வேண்டும். அரசமைப்பில் அன்று தேவைப்பட்ட சில பிரிவுகள் இன்று தேவைப்படாமலிருக்கலாம்; அல்லது அன்று ஏற்படுத்திய சில வரைமுறைகள், அன்று மாநிலங்களிடமிருந்து எடுத்துக் கொண்ட சில அதிகாரங்கள் இன்று அவசியமில்லாதிருக்கலாம். நாம் இந்த முடிவுக்கு வந்தாலும் வரலாம்; வராமலும் போகலாம். நாம் திறந்த மனதோடிருக்கிறோம். எனவே, இதுபற்றி விவாதம் நடத்துவதால் குடி முழுகிப் போகுமா? ஜனநாயகம் என்பதே விவாதம்தானே!

கே: அதைத்தான் மக்கள் மறந்துவிடுகிறார்கள்!

ப: உண்மைதான். மறந்துதான் விடுகிறார்கள்! எப்பொழுது மறக்கிறார்கள்? அதிகாரத்திற்கு வந்தவுடன் மறந்து விடுகிறார்கள்! எதிர்க்கட்சியாகஇருக்கும்போதெல்லாம் இதுதான் சரி என்று ஏற்றுக் கொள்கிறார்கள். முன்னாள் பிரதமர் செய்தது என்ன? விவாதங்களையெல்லாம் நிறுத்திவிட்டார். ஜெயப்பிரகாஷ்நாராயணன் போன்றவர்கள் கோரியது என்ன? "விவாதம் நடத்த வேண்டும்' என்பதுதான்.

கே: மத்திய — மாநிலப் பிரச்சினையில் ஜே பி உங்களை ஆதரிக்கிறார் அல்லவா?

ப, முழுக்க முழுக்க ஆதரிக்கிறார். ஆனால் (சோகக் குரலில்) இதற்கென இயக்கம் நடத்தும் நிலையில் அவர் இல்லையே!

கே: இந்தப் பிரச்சினையை வலியுறுத்துவதற்காக நடைபெறவிருக்கும் சில முதலமைச்சர்களின் மாநாட்டில் ஜே. பி. கலந்துகொள்ளப் போவதாகக் கேள்விப்பட்டேனே!

ப; அவ்விதம் கலந்து கொள்வதற்கேற்ற உடல் நலத்துடன் அவர் (ஜே.பி.) இல்லை. உண்மையிலேயே அவர் மோசமான நிலையில் இருக்கிறார்.

கே: ஜே. பி. -யின் சில வேண்டுகோள்களை ஜனதா அரசு புறக்கணித்துவிட்டதாகத் தோன்றுகிறதே!

ப; எனக்குத் தெரியாது...... அப்படியானால், அது தற்கொலைக்கு ஒப்பானது. விவாதத்தைத் தடுத்துவிட்டால், அது தலைமறைவாகிவிடும். அதன்பின், அண்மையில் நாம் அனுபவித்த எல்லாத் தொல்லைகளுக்கும் அது வழி வகுக்கும்.

கே- உங்களுடைய செய்தியை டில்லிக்கு உணர்த்துவதற்காக, ஜனநாயகநடவடிக்கை —உதாரணமாக, அமைதியான ஆர்ப்பாட்டங்களை நடத்துதல்—எதிலும் ஈடுபட எண்ணியிருக்கிறீர்களா?

ப; அப்படிச் செய்வதால் ஒரு பலனும் ஏற்படாது.

கே:நிர்ப்பந்தத்தைஏற்படுத்தும் குழுக்களையாவது இதன் மூலம் உண்டாக்கலாமல்லவா?

## மரணமடையும் மன்னர்கள்!

**போதிய உணவின்மை, வறுமை, ஊட்டக் குறைவு, நோய்க்கு இடம் தரும் சுற்றுச் சூழல், தேவையான மருத்துவ வசதி இல்லாமை · ஆகிய காரணங்களால் ஆண்டுதோறும் சின்னஞ் சிறார்கள் மிக அதிகமாக மரணமடைவது உலகில் எந்த நாட்டில் தெரியுமா?**

**"எல்லோரும் இந்நாட்டு மன்னர்களே' என்று எந்த நாட்டில் குழந்தைகளைப் பார்த்துப் புகழப்படுகிறதோ, அந்த நாட்டில்தான்!— அதாவது, இந்தியாவில்தான்!**

ப: என்னைப் பொறுத்தவரையில் நிர்ப்பந்தக் குழுக்கள் என்ற பிரச்சினையே இல்லை. இந்தக் கோரிக்கைக்கு (மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரங்கள்) எனது முழு ஆதரவும் உண்டு ஆனால் காஷ்மீரைப் பொறுத்த அளவில், மத்திய அரசுடன் காஷ்மீரின் உறவுகள் அரசமைப்பின் 370 ஆவது பிரிவில் திட்டவட்டமாக வரையறுக்கப் பட்டுள்ளன. எங்களுடைய மனக்குறை என்னவென்றால் இதில் சில 'சரிவுகள்'' ஏற்பட்டுள்ளன; அதனைச் சீராக்க வேண்டும் என்பது தான். இப்போதுள்ள இந்திய அரசமைப்பு எங்கள்மீதுமுழுமையாகஇயங்கவில்லை நீண்ட அதிகாரங்கள்,மத்ய அரசிடம் இல்லாமல் மாநில அரசிடம் அமைந்திருப்பது காஷ்மீர் மாநிலம் ஒன்றில்தான். இதைத்தான் ஜோதிபாசுவும் மற்றவர்களும் கோருகின்றார்கள். தற்போது மத்திய அரசிடம் மிகப் பெரிய கண்காணிப்புச் சாதனம்— இராணுவம் இருக்கிறது. எனவே எந்த மாநிலமும் தறிகெட்டுப்போகும் என்ற அபாயம் இல்லை. தவிரவும், நாணயச் செலாவணி வெளிநாட்டு விவகாரம், ஓரளவு வரி விதிப்பு அதிகாரம், இவையெல்லாம் மத்திய அரசிடம்தானே உள்ளன. இன்னும் என்னென்ன வேண்டும்?

கே: பொதுவான தொழில் கொள்கையை மத்திய அரசு வரையறுக்க வேண்டுமென கருதுகிறீர்களா?

ப: நாங்கள் ஏதும் சொல்லவில்லை எல்லாம் பொதுவில் உள்ளன. எதையும் கருத்தொருமித்தே செய்ய வேண்டுமென்றுதான் நாங்கள் கூறுகிறோம்.

கே: உங்களுடைய சொந்த அனுபவம் காரணமாகத்தான் நீங்கள் இன்று இக்கருத்தைக் கொண்டதாகச் சொன்னீர்கள். உங்களுடைய சொந்த அனுபவம் என்ன?

ப; மத்திய அரசின் தலையீடு அளவுக்கு அதிகமாக உள்ளது. தும்முவதற்குக்கூட மத்திய அரசிடம் அனுமதி கேட்க வேண்டும். 370-வது பிரிவு இருந்தபோதிலும்(1950 இல்) என்னுடையகுரல்தான் எதிர்ப்புக் குரலாக எழுந்தது. அதற்காக 21 ஆண்டுகள் நான் அவதியுற நேர்ந்தது. அடிப்படையில் (எனக்கும் டில்லிக்கும்) கருத்து வேற்றுமை ஏதும் இருந்ததில்லை. காஷ்மீரை இந்தியாவின் ஒரு பகுதியாக ஆக்கிய சிற்பி நான். அந்த நேரத்தில் நான் அவ்விதம் முடிவெடுக்காமலிருந்திருந்தால் இந்தியாவுடன் காஷ்மீர் இணைப்பு ஏற்பட்டிருக்காது. எனவே கருத்து வேற்றுமை ஏற்பட்டது இணைப்புப் பற்றியல்ல, எந்த அளவுக்கு இணைப்பு என்பதைப் பற்றித்தான். ஒரு நிலையைத் திட்டவட்டமாக வரையறுத்திருந்தோம்; பின்னர் அந்த நிலை முழுவதையுமே அரித்துவிட அவர்கள் (டில்லி) எண்ணினர்கள். அதை நான் எதிர்த்தேன்; மக்கள் சம்மதமின்றி ஏற்க இயலாதென மறுத்தேன். ஆகவே நான் அப்புறப்படுத்தப் பட்டேன்.

கே- உங்கள் நண்பர் பண்டித நேருதானே உங்களை நீக்கினார்.

ப: நேரு செய்தாரா, வேறு யாரேனும் செய்தாரா என்பது பிரச்சினையல்ல: பிரதமர் செய்தார் என்பதுதான் பிரச்சினை. அவ்விதம் செய்ததற்கு, அரசமைப்பின் அனுமதி இல்லை; சட்டச் சம்மதம் இல்லை; தரும நியாயமும் இல்லை; எதுவுமே இல்லை. இதற்குக் காரணம் எங்கள் இராணுவத்தை அவர்களிடம் ஒப்படைத்ததுதான். என்னை நீக்கியதனால் நல்லவிளைவுகள் ஏற்படவில்லை. இந்தியாவுக்கு அவப்பெயர் உண்டாயிற்று, நமது உறவு சீர்குலைந்தது அரிதின் முயன்று வளர்த்து வந்த நம்பிக்கை பலவீனமடைந்தது எங்கள் மாநிலத்தைப் பார்த்து மற்ற மாநிலங்களும் கோரிக்கைகளை எழுப்பலாயின. அதனால் மற்ற மாநிலங்களுக்குச் சம நிலையில் எங்கள் மாநிலத்தைக் கொண்டுவர விரும்பினார்கள். இதை நாங்கள் எதிர்த்தோம்.

கே: நீங்கள் ஒரு இந்தியர் அல்ல என்று கூடச் சொன்னார்கள்

ப: ஆமாம். தமிழ் நாட்டை நோக்கியும் அவர்கள் இதைத்தான் சொன்னார்கள். தமிழ் நாடு பிரிந்து செல்ல விரும்புவதாகக் கூறினார்கள். ஜோதிபாசுவுக்குக்கூட இந்தப் பட்டம் சூட்டினார்கள். அவர் நிர்ப்பந்தித்தால் உடனே, "ஓஹோ! அவர் பிரிவினையை விரும்புகிறார்; ஓடிவிடப்பார்க்கிறார் 'என்று உண்மைக்குஅருகே நெருங்கி கூட வர முடியாத சில விளக்கங்களைக் கூறினார்கள். "நீ பிரிந்து செல்ல விரும்புகிறாய்'' என்று என்மீது குற்றம் சுமத்த முடியாது. இதில் பிரிவினைப் பிரச்சினை எங்கே இருக்கிறது?

**("சண்டே'' ஆங்கில இதழிலிருந்து எடுக்கப்பட்டது)**



# வழக்கு மன்றத்தில் பூட்டோ!

“மார்ச் 18–கல்கத்தா நகரில் மாபெரும் பொதுக் கூட்டத்தில் முன்னாள் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி முழங்கிக் கொண்டிருக்கிற போது, இலாகூர் உயர்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது; கொலைக் குற்ற விசாரணையில் ஜுல்பிகார் அலி பூட்டோ செய்த குற்றத்திற்கு மரண தண்டனை என்று.

வழக்குத் தொடுக்கப்படுவதற்குரிய ஆதாரங்கள் அடுக்கடுக்காக இருந்தன. கைது செய்யப்பட்ட காரணத்தாலேயே இழந்துவிட்ட அரசியல் செல்வாக்கை ஒருவர் மீண்டும் பெற்றார். அரசியல் அரங்கில் ஆர்ப்பாட்டத்தோடு உலவிட ஆரம்பித்தார். இவரைப் போலவே அரசியல் வானில் அவனி மெச்ச ஒளிவீசிய ஒருவர் அழிவின் எல்லைக்கே அப்புறப் படுத்தப்படுகிறார்?

பூட்டோவின்மீது கூறப்பட்டுள்ள புகார்கள் அனைத்தும் அரசியல் காரணமாக அறிவிக்கப்பட்டுள்ளன என்று பரவலாக நம்பப்படுகிறது...

1977 ஜூலை 5-ம் தேதி பாகிஸ்தானில் இராணுவப் புரட்சி வெடித்தது. ஆனால் துப்பாக்கிகள் வெடிக்கவில்லை; மண்ணில் இரத்தம் சிந்தப்படவில்லை. ஆட்சியிலே இருந்த பூட்டோ அகற்றப்பட்டார். இராணுவத் தலைவர் ஜியா-உல்-ஹக் ஆட்சியைப் பிடித்துக் கொண்டார். அதற்குப்பின் பூட்டோ அடிக்கடி சிறைப் பிடிக்கப்படுவதும் விடுவிக்கப்படுவதும்வாடிக்கையாகிவிட்டது அதன்மூலமாக அரசியலில் ஈடுபட்டுப் பணியாற்றுவதைத் தடுத்து வந்தார்கள். ஆட்சியை நடத்தி வரும் அதிகார வர்க்கத்தினர் பூட்டோவை நடத்தி வந்தவிதம் அநாகரிகமாக இருந்தாலும் அவர்கள் அஜாக்கிரதையாக இருந்துவிடவில்லை. இந்தச் சூழ்நிலையில் தேசியச் சட்டப் பேரவைக்கு 1977-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18-ஆம் நாள் தேர்தல் நடக்குமென்றுநாட்டைஆண்டு வருபவர்கள் அறிவித்தார்கள். ஆனால் பூட்டோவின் மீதும் லஞ்சப் புகாரும் மோசடியும் உடைமைகளைக் கையாடிய குற்றங்களும் சுமத்தப்பட்டன. தேர்தலும் தள்ளி வைக்கப்பட்டது.

அரசியல் தலைவர்களின் மீதுள்ள வழக்குகள் தீர்ப்பளிக்கப்பட்டு அவர்கள் யார் என்பதை உலகம் சரியாகப் புரிந்து கொண்ட பின்னால் தான் தேர்தலுக்கான மறு தேதி அறிவிக்கப்படும் என்று ஆட்சியின் அதிபர் ஜியாஉல்-ஹக் அறிவித்தார். முன்னாள் தேசிய சட்டப் பேரவையின் உறுப்பினராக இருந்த அகமது ராசா கசூரியைக் கொலை செய்ய பூட்டோ ஆணையிட்டதாகப் பெரிய புகார் ஒன்று கூறப்பட்டது. 1974-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 10-ம் நாள் பூட்டோவின் ஆதரவாளராகஇருந்துவந்தஅகமதுராசா கசூரி பயங்கரமான விரோதியாக மாறிவிட்டார் என்பதே இதற்குக்காரணமாகும்என்று சொல்லப்படுகிறது. காரில் சென்று கொண்டிருந்த கசூரியைத் திட்டமிட்டபடிக் கொலை செய்ய குறிவைத்துச் சுட்டனர். குறி தவறி கசூரி தப்பித்துவிட்டார். ஆனால் அவரது தந்தை முகமது அகமதுகான் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாகிவிட்டார். கூட்டுப் பாதுகாப்புப் படையினர் இயந்திரத் துப்பாக்கியால் சுடுமாறு பூட்டோவால் ஏவப்பட்டனராம். அந்தப் படையைச் சார்ந்த 5பேர் கொலை செய்ய முயன்றதாக ஒப்புக்கொண்டனர். 1977-ஆம் ஆண்டு செப்டம்பர் 5-ஆம் தேதி இரகசியக் காவல்துறை துப்புத் துலக்குவோர் ஓர் அறிக்கையை அளித்தனர். பூட்டோவின் எதிரியான நசீர் அகமதுவை தென் பஞ்சாபின் ஒரு பகுதியிலுள்ள ஒரு மருந்தகத்தில் பூட்டோவின் ஆணையின் மீது கொலை செய்ய முயன்றதாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளனர்.

ஏற்கனவே ஒரு கொலைக் குற்றத்தில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் இந்நேரத்தில் பூட்டோமீது மேலும் ஒரு கொலைக் குற்றத்தைக் கொண்டுவர அரசு முயன்று கொண்டிருக்கிறது.

இரகசியப் போலீசாரின் விசாரணைக்குப் பின்னர் மஜிஸ்ட்ரேட் உத்தரவின் பேரில் பூட்டோ கைது செய்யப்பட்டதற்குப் பின் கராச்சிக்குக் கொண்டு செல்லப்பட்டு காவலில் வைக்கப்பட்டார்.

செப்டம்பர் திங்கள் 13-ம் நாள் ரூ 15 000-க்கு ஜாமீனில் விடுவிக்கப்பட்டார் இராணுவச் சட்டத்தின் அடிப்படையில் நான்கு நாட்களுக்குப் பின்னர் மீண்டும் அவரது சொந்த நகரமான லர்கானாவிலிருந்து தூக்கிச் செல்லப்பட்டார். இலஞ்சக் குற்றச்சாட்டின் அடிப்படையில் பூட்டோவையும்அவரைச் சார்ந்த 4 பேர்களையும் இராணுவ வழக்கு மன்றத்தில் விசாரிக்கும்படி ஆணைபிறப்பிக்கப்பட்டது.

பூட்டோ ஜாமீனில் விடுதலைபடைய முயன்றார். ஆனால் அவருடைய வேண்டுகோள் இலாகூர் உயர்நீதிமன்றத்தால் புறக்கணிக்கப்பட்டது. ஒரு கொலை வழக்குப்பற்றி நீதித்துறைக் காவல்கைதியாக வைக்கப்பட்டிருந்தார். இலாகூர் சிறையில் தனி வழக்கு மன்றம் அமைக்கப்பட்டுக் கொலைக் குற்றத்திற்காக அவர் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்பட்டபோது அரசியல் பண்பாடின்மைக்காக வழக்கே தள்ளிவைக்கப்பட்டது.

1977-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் கொலைக் குற்றம் பற்றி விசாரணை தொடங்கப்பட்டது. தன்னுடைய செல்வாக்கை இழந்துவிடுவோமோ என்று அஞ்சி நடுங்கிய இராணுவப் படைத்தளபதி ஜியா, பூட்டோவை வழக்கு மன்றத்தில் விசாரிக்க வற்புறுத்தவில்லை, போலும்.

மனித உரிமையையும், நீதி பொருந்திய தீர்ப்பு வழங்கப்பட்டு வந்த பெருமையையும் விடுதலை பெற்ற காலத்திலிருந்து பாகிஸ்தான்காப்பாற்றி வந்துள்ளது.

இராணுவத் தளபதியான அயூப்கான் இராணுவச்சட்டத்தைக் கிழித்தபோது கூட்டு உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி முகமது முனீர் அதை நியாயம் என்று தீர்ப்பளித்ததுதான் பாகிஸ்தானுடைய நீதித்துறையிலே கடந்த காலத்தில் ஏற்பட்ட ஒரு களங்கமாகும்!

பூட்டோ மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளைப் பற்றி நீதிபதிகளுக்கு முழு நம்பிக்கை இல்லை அவருடைய பதிலடி தரும் போக்கால் நீதிபதிகள் அடிக்கடி சங்கடத்துக்குள்ளானார்கள்.

வழக்குமன்றத்தை அவமதிப்புக்குள்ளாக்குவதற்கு அவர் அஞ்சவில்லை. ஏனெனில் 6 திங்கள் தண்டனைதானே அளிக்கப்படும் அதி பயங்கரமான புகார்கள் அவர் மீது

**சா. கணேசன்**

இருந்தபோது, வழக்கு மன்றத்தில் அவர் பொறுப்பற்றவராகவே நடந்துகொண்டார்.

தலைமை தாங்குகிற நீதிபதியைத் தொடர்ந்து குற்றஞ்சாட்டினார்; ஒருதலைப்பட்சமாகவும் நீதிக்குப் புறம்பாகவும் நீதிபதி நடந்துகொள்கிறார் என்று கூறி ஜனவரித் திங்களில் வழக்குமன்றத்தையே புறக்கணித்தார் பூட்டோ.

ஒருமுறை வழக்கு நடந்து கொண்டிருக்கும்போது தலைமை நீதிபதி மௌல்வி முஸ்தாக் உசைனைப் பார்த்து “நான் மிகவும் பாதிக்கப்பட்டுவிட்டேன்: வழக்கு மன்றத்தைவிட்டு என்னை வெளியேற்றுங்கள். குழப்பத்திலிருந்து நான் தெளிவடைந்த பின் என்னை மீண்டும் மன்றத்திற்குக் கொண்டுவாருங்கள்” என்றார் பூட்டோ,

மன்றத்தால் நீண்ட நேரம் வழக்கை நடத்த முடியவில்லை. ஏனெனில் சட்டப்படி வழக்குக்குரியவர் மன்றத்தின் முன்பு இல்லையெனில் வழக்கை அன்றையதினம் தொடர்ந்து நடத்த சட்டம் அனுமதிக்காது.

மற்றொரு முறை ஒரு சாட்சி, ‘உயர்நீதிமன்ற நீதிபதியைக் கொலை செய்யச் சதி செய்ததாக’ பூட்டோ மீது குற்றம்சாட்டினார்.

“நல்ல வேளையாக தலைமை நீதிபதியைக் கொலை செய்ய முயற்சிக்கவில்லை போலும்” என்றார் நீதிபதிஉசைன்.

வழக்கு விசாரணை ஐந்து மாதங்களுக்குத் தொடர்ந்து நடைபெற்றது. பூட்டோவைக் கைது செய்ய நேரிட்டால் நாட்டில் பரவலாகக் கலவரங்கள் ஏற்படலாம் என்று கருதப்பட்டு மார்ச் 31-ஆம் நாள் வரை எல்லாக் கட்சிகளின் நடவடிக்கைகளும் நிறுத்திவைக்கப்படவேண்டுமென்று தடைசெய்யப்பட்டது.

வழக்கு விசாரணையின் போது பூட்டோ வாதாட முன்வரவில்லை. வழக்குமன்றத்தில் பொதுமக்கள் பார்வையாளர்கள் மத்தியில் குற்றவாளியை விசாரித்தார்கள். குற்றங்கள் சுமத்தப்பட்டவர் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வாதாடும்போது பார்வையாளர்கள் அனுமதிக்கப்படவில்லை. கதவுகள் மூடப்பட்ட நீதிமன்ற அறையில் வழக்கு நடந்தது.

பூட்டோ தன்மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்யக் கோரி வாதாடினார். நாட்டின் முதன்மையான அரசியல் தலைவனை அழித்திடச் செய்யும் அநியாயமான சதிச்செயல் நடவடிக்கையே இது. என்று என்று திரும்பத் திரும்ப கூறினார்.

‘உங்கள் வீட்டின் முன்னாலே துப்பாக்கிகள் வெடிக்கும்’ என்று அநாமதேய தந்திகளும் அவசரக் கடிதங்களும் நீதிபதிக்குக் குவிந்தனவாம்!

பாகிஸ்தான் நாட்டின் எதிர்காலம் அரசியல் நெருக்கடிக்கு ஆளாகியது. கவனத்தோடும் அரசியல் திறத்தோடும் கூடிய நிலையில் அதிகார வர்க்கத்தினர் நிலைமையைச் சமாளிக்க முயன்றனர். மக்கள் பார்வையாளர்களாக அனுமதிக்கப்பட்ட வழக்குமன்றத்தில் பூட்டோவின் விசாரணைக்கு அரசு அனுமதி தந்தது. இந்த நிலை அரசுக்கு அவமதிப்பைத் தேடித் தந்தது. ஏனெனில் விசாரணையின் போது பூட்டோவைப் பற்றிய புகழ் ஒளிவு மறைவின்றி வெளிப்பட்டது முதலில் விசாரணையை மறைவான அறையில் நடத்துவதென்றும் பொதுமக்களையும் செய்தியாளர்களையும் அனுமதிக்கக்கூடாது என்றும் முடிவு செய்தனர். அதிகார வர்க்கம் வெளியிடும் வழக்கு நடவடிக்கைகளை செய்தித்தாள்களுக்கு அனுப்பிவைக்கச் செய்தனர். அதனால் பூட்டோ வழக்கை அரசியலாக்குவதில் வெற்றிகரமாகச் செயல்பட்டார்.

‘அப்படியே ஒருவரை, பூட்டோ கொன்றிருந்தாலும் அதனால் என்ன?’ என்று அவருடைய ஆதரவாளர்கள் வாதாடத்தொடங்கினர்.

“இது கொலைக்காகச் செய்யப்படுகிற நீதிவிசாரணையாக இல்லை. இது நீதி விசாரணையையே கொலை செய்கின்ற ஒன்றாகும்’ என்று பூட்டோ கூறினார்.

பூட்டோவின் மனைவியும் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தற்போதைய தலைவியுமான பேகம் நுஸ்ரத் பூட்டோ, “எனது கணவர் வழக்கின் முடிவில் குற்றவாளி என முடிவு செய்யப்பட்டால் நாட்டில் பெரும் கலவரம் உண்டாகும்” என்று தாம் அறிக்கைவிட்டதாகக் கூறுவதை மறுத்தார்.

கடைசியாக மார்ச் திங்கள் 18-ஆம் நாள் பூட்டோவையும், முன்னாள் இபக்குநரான மியான் முகம்மது அப்பாஸ் உட்பட நான்கு கூட்டுப் பாதுகாப்புப் படையைச் சார்ந்தவர்களுக்குத் தூக்கிலிட்டு உயிரைப் போக்கும் கொடுந்தண்டனைத் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

பாதுகாப்புக் காரணத்தை முன்னிட்டுகுறிப்பிட்ட நேரத்திற்குப் பதினைந்து நிமிடங்களுக்கு முன்னாலேயே நீதிபதி தீர்ப்பினை அறிவித்தார்.

மரண தண்டனை அறிவிக்கப்பட்ட மறுநாள் பாகிஸ்தானில் பரவலாக வேலை நிறுத்தங்களும், ஆர்ப்பாட்டங்களும் ஆங்காங்கே நடைபெற்றன. இவற்றிற்கு ஆதரவாக இருந்தவர்கள் என்று குற்றம் சுமத்தப்பட்ட பெரிய அதிகாரிகள் பலர் வேலையிலிருந்து தூக்கியெறியப்பட்டார்கள். இந்நிலையில் பூட்டோவின் சொந்த நகரமான லர்க்கானாவில் உள்ள மருத்துவக்கல்லூரி மாணவர்கள் கல்லூரியிலிருந்து வெளியேறினார்கள். ஆனால் சிந்து மாநிலத்தில் உள்ள நான்கு நகரங்களில் பூட்டோவுக்குத் தண்டனை அளித்ததை [illegible] மக்கள் இனிப்பு வழங்கினார்களாம்,

அளிக்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து உச்ச வழக்கு மன்றத்தில் வழக்காடுவதற்கு மனுச்செய்து கொண்டுள்ளார். ஒன்று மட்டும் உறுதி. சோடிப்பு வழக்குகளால் மட்டுமே, ஒரு தலைவனை மக்களிடமிருந்து தூக்கி மண்ணில் எறிந்துவிட முடியாது.

# விவசாயிகள் போராட்டம்!

# தி.மு.க. தலைமைச் செயற்குழு தீர்மானங்கள்!

கடந்த 19-4-78 அன்று சென்னையில் தலைவர் கலைஞர் தலைமையில் நடைபெற்ற தி. மு. க. தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் விவசாயிகள் போராட்டம் தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் இங்கு தரப்பட்டுள்ளன.

## இரங்கல்

1. அண்மையில் நடைபெற்ற விவசாயிகளின் போராட்டத்தில் போலீஸ் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த விவசாயிகளின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தையும், அடக்குமுறையினால் காயம்பட்டுள்ள விவசாயிகளுக்கு ஆறுதலையும் இச்செயற்குழு தெரிவித்துக் கொள்கிறது

## அடக்குமுறைக்குக் கண்டனம்

2. புயல் வெள்ளப்பாதிப்புகளாலும் வறட்சியாலும் கடன் தொல்லைக்கு ஆளாகியிருக்கிற நடுத்தர சிறு விவசாயிகளுக்கு அரசு அளித்த வாக்குறுதிக்கு மாறாக ஜப்தி, கைது போன்ற கடுமையான நடவடிக்கைகள் எடுத்ததற்கும், தங்கள் கஷ்டங்களை எடுத்துரைத்த விவசாயிகளின் பிரச்சினையைக் கலந்து பேசி முடிவெடுக்க வாய்ப்பே இல்லாத நிலையில் அவர்கள் மீது இராணுவத்தையும் போலீசையும் ஏவிவிட்டுக் கொடுங்கோன்மை நடத்தப்படுவதற்கும் இச்செயற்குழு தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

## நீதிவிசாரணைக்குழு அமைத்திடுக

3. விவசாயிகளின் மீது போலீசாரின் துணையோடு ஆளுங்கட்சியினர் பல இடங்களில் திட்டமிட்டுத் தாக்குதல் நடத்தி அவர்களது பம்பு செட்டுக்கள், விவசாயக் கருவிகள், கால்நடைத் தீவனங்கள் போன்றவைகளை உடைத்து நொறுக்கியும் தீ வைத்துக் கொளுத்தியும் உள்ள நிலைமைகளை ஆராயவும், விவசாயிகளின் பிரச்சினையில் இந்த அரசின் அணுகுமுறை எவ்வாறு இருந்தது என்பதை ஆராயவும், விவசாயிகளின் கிளர்ச்சி திடீரென்று வெடித்துக் கிளம்பியதற்கான காரணங்களை ஆராயவும்—உயர்நீதிமன்ற நீதிபதியும், பொதுமக்கள் பிரதிநிதிகளும் கொண்ட ஒரு விசாரணைக் குழுவை உடனடியாக அமைக்கவேண்டுமென்று அரசை இச்செயற்குழு வலியுறுத்துகிறது.

## கைதானவர்களை விடுதலை செய்க

4. இந்தக் கிளர்ச்சியின் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள விவசாயிகள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்யவேண்டுமென்று இச்செயற்குழு அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்வதோடு, அவர்கள் மீது தொடரப்படும் வழக்குகள் அனைத்தையும் கைவிட்டுவிட வேண்டுமென்றும் கோருகிறது.

## ஆளுங் கட்சியினரின் போக்குக்குக் கண்டனம்

5. இந்தக் கிளர்ச்சியில் ஈடுபடாத தி மு. க. முதலான எதிர்க் கட்சிக்காரர்களை, ஆளுங்கட்சியின் தூண்டுதல் காரணமாகக் கைது செய்திருப்பதைக் கண்டிப்பதோடு, அவர்களை உடனடியாக விடுதலை செய்து, அவர்கள் மீதுள்ள வழக்குகளையும் கைவிடுமாறு இச்செயற்குழு வலியுறுத்துகிறது.

## இராணுவம் அழைக்கப் பட்டதற்குக் கடும் கண்டனம்!

6. ஜனநாயகத்திற்கு முற்றிலும் மாறான முறையில், பொதுமக்களை பீதிக்கு ஆட்படுத்தி அலைக்கழிக்கும் வகையில் இராணுவத்தைத் தொடர்ந்து பல நாட்களாகப் பல்வேறு இடங்களில் முகாம் செய்ய வைத்தும், ரோந்து சுற்ற வைத்தும் கையாளுகிற அடக்குமுறைத் தன்மையை இச்செயற்குழு சுட்டிக் காட்டி உடனடியாக இராணுவத்தை திரும்பிடச் செய்ய வேண்டுமென்று இச் செயற்குழு வற்புறுத்துகிறது.

## சமூக விரோத சக்திகளுக்குக் கண்டனம்!

7. அமைதியாக நடைபெற்று வந்த விவசாயிகளின் கிளர்ச்சியில் ஆளும் கட்சியினரும், சமூக விரோத சக்திகளும் நுழைந்து சில இடங்களில் பொதுமக்கள் பாதிக்கப்படும் வகையில் வன்முறைச் செயல்களைத் தூண்டிவிட்டதை இச் செயற்குழு கண்டிக்கிறது.

## அமைச்சர்களின் போக்குக்குக் கண்டனம்!

8. விவசாயிகளின் மனம் புண்படும்படியாக, அவர்கள்மீது பல்வேறு அவதூறுகளைப் பரப்பிவரும் அமைச்சர் செயல் குறித்து இச் செயற்குழு தனது கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

## அடக்குமுறை கண்டன வாரம்!

9. இந்தப் பிரச்சினைகள் குறித்து மக்களுக்கு விளக்கவும், அரசு, தன் போக்கை மாற்றிக் கொள்ளவும், வலியுறுத்தும் வகையில் 23 ஞாயிறு முதல் ஒரு வார காலம் நாடெங்கும் "அடக்குமுறைக் கண்டன வாரக்" கூட்டங்கள் நடத்துவதென்று இச் செயற்குழு முடிவு செய்கிறது.

# ஊற்றில்லாத பாலைவனம்!

-: கவிஞர் குடியரசு :-

முதலமைச்சர் எம். ஜி. ஆர்.! இவருடைய மனச்சாட்சி கடப்பை ஜில்லாவில் தயாரானது—பழிவாங்குவதில் "பழியை" விட பத்து மார்க்குகூட வாங்கியவர் இவர் நடித்த படங்களில்—ஏற்ற பாத்திரத்தை வைத்துப் பார்த்தால்—மண்ணில் முளைத்த முதல் உத்தமன் என்று எண்ணத் தோன்றும்!

ஆனால், இவர் ஊற்றே இல்லாத பாலைவனம்!

இந்திராவுக்குக் கறுப்புக் கொடி காட்டினால் தலைவர்மீது 307 போடுகிறார்! ஆனால், நீதிபதி இஸ்மாயில் குற்றவாளி என்று நிரூபித்த அதிகாரிகளைத் தண்டிக்க மனம் வரவில்லை!

கழகத்தையும் கழகத் தலைவரையும் பூண்டோடு பொசுக்க வேண்டும் என்ற எண்ணம்—கழகத் தலைவர்மீதுள்ள பொறாமையை வெளிப்படுத்துகிறது!

ஆற்றல் இல்லாதவன்தான் பொறாமைப்படுவான்!

"பொறாமை" தன்னம்பிக்கை இல்லாதவனுக்கு ஏற்படும் தளர்ச்சி!

இவர் போன்றவர்கள் எதிரியின் பிணத்தைக் கொத்தும் கழுகுகளே தவிர—சோற்றை உண்ணும் மனிதர்கள் அல்ல.

எதிரி இறப்பானா என்ற ஏக்கப் பெருமூச்சு இவர்களின் சுவாசத்துக்குச் சொந்தம்!

அற்பாயுள் புகழைவைத்தே காலத்தை வெல்லக் காப்புக் கட்டுவார்கள். இவர்களுக்கு வருத்தப்படத் தெரியாது. இவர் நடிப்புக்காகக்கூட வருத்தப்பட்ட சோகக் காட்சிகளில் நடித்ததில்லை!

இளகிய மனத்தில்தான் சோகம் கப்பும்! பாறையில் இந்தப் பரபரப்பு பட்டொளி வீசுவதில்லை!

இவரை தி. மு. க..வில் இருந்தவர் என்கிறார்கள்! இதை நான் ஒப்புவதில்லை! இருப்பதற்கும் — வாழ்வதற்கும் வித்தியாசம் உண்டு. ஏசுவோடு ஜூடாஸ் இருந்தவன்தான் — ஆனால், அவரோடு வாழ்ந்தவனா? சாக்ரடீசோடு அனிடஸ் இருந்தவன் — ஆனால்; அவரோடு வாழ்ந்தவனா? இராவணனோடு விபீடணன் ஒரே கருப்பையில் இருந்தவன்தான்—அவனோடு வாழ்ந்தவனா?

ஒரே செடியில் வேம்பும்—குண்டுமணியும் இருக்கின்றன தான்! ஆனால் வேம்பு — அடிமரமாகிறது — வாழ்விக்கிறது.

குண்டுமணி செடியின் தலையில்தான் காய்க்கிறது—ஆனால் விஷமாயிற்றே!

தவளையும்—தாமரையும் ஒரே குளத்தில்தான் இருக்கின்றன.

தாமரையின் தாது தவளைக்குப் புரியாதே!

இந்த ஆளுக்கும் இயக்கத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை! அது ஓர் தூரதேசக் கழுகு! வந்து சேர்ந்த வல்லூறு—தேவையில்லா அழுக்கு!

விளைவு—தமிழனைச் சாய்க்க அந்நியன் முயற்சிக்கிறான்.

இது புதிதல்ல – சரித்திரச் சுழல! இந்த இயக்கத்தின்மீது தொடுத்த போர! அது 307 மூலமாகவும் — இஸ்மாயில் கமிஷன் தீர்ப்பைப் புறகணிப்பது மூலமாகவும் – நிழலாடுகிறது!

இஸ்மாயில கமிஷன்மீது நடவடிக்கை எடு என்பது ஜனநாயகத்தின் கேள்வி! சர்க்காரியா கமிஷன்மீது நடவடிக்கை எடுப்பேன் என்பது சர்வாதிகாரி வைத்த எச்சில் இலையின் மிச்சத்தை சுவைப்பது போன்றதாகும்!

இஸ்மாயில் – இரண்டாவது சுதந்திரப் போரின் வாகைப் பூ!

சர்க்காரியா—சர்வாதிகாரியின் சோகை நோய்!

இஸ்மாயில் தீர்ப்பு மனிதாபிமானத்தின் மகுடம்.

சர்க்காரியா தீர்ப்பு இந்திராவின் நிழல.

இந்த உண்மையை விவரம் தெரியாத மக்களிடம் மூடி மறைப்பவன் மூர்க்கன்—குடிலன்—குடிகேடன்!

இஸ்மாயிலா—சர்க்காரியாவா! எது வேண்டும் சொல் மனமே! என்று இந்த முதலமைச்சனை விளிக்கவில்லை, காரணம இந்த ஆள் பொறாமையில புழுத்த புழு!

டெல்லி என்ன சொல்கிறது! சர்க்காரியாவைக் கிள்ளிவிட்டு ஜனநாயகத் தொட்டிலை இஸ்மாயிலைவிட்டு ஆட்டுகிறதா!

இப்படிப்பட்ட அரசியலை நடத்துவதற்கா நீங்களெல்லாம் இந்திராவை எதிர்த்தீர்கள்! சர்வாதிகாரி என்று இந்திரா அதுவும் ஓர் பெண் வீரமாக வெளியே வந்தாள்! ஆனால், நீங்கள் ஜனநாயகவாதி என்று ஆண்களாக இருந்தும் வெளியே வர முடியவில்லை!

பாதல் பட்வாரி — பொன்னுண்டசை மதிக்கிற அளவுக்குக் கலைஞரை மதிக்க முடியவில்லை!

உங்கள் இதயமே பரந்த இந்தியாவாக தமிழ்நாடு வரையில் விரிய முடியவில்லை என்றால்—நீங்கள் வடநாட்டுத் தலைவர்களே தவிர தென்னாட்டுக்குத் தலைவர்கள் இல்லை!

கூத்தாடி மாறினாலும் வசனம் ஒன்றுதான்—என்று கலைஞர் சொன்னது எவ்வளவு உண்மை!

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களால், அழகிரி அச்சகத்தில் (24. சூரியநாராயண செட்டி தெரு, இராயபுரம் சென்னை 600013) அச்சிட்டு வெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம்; 'அன்பகம்' 1/104-B, அண்ணாசாலை, தேனாம்பேட்டை சென்னை-600018 தொலைபேசி 441009